# எதிரொலி

ஆஸ்திரேலியா

ETHIROLI

குரல் 09 அதிர்வு 97 ஆடி 2025 editor@ethiroli.com தொ.பே:1800 960 162



Budget Friendly
Home Improvements Pty Ltd
Quality
Renovation Work
0400 287 198










ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்

ROYAL INTERNATIONAL MONEY TRANSFERS

EASY • FAST • SAFETY

நாணயமிக்க பணப்பரிமாற்றம்
'டன்டிநொங்' இல்
புதியதோர் சேவை

BOC
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
සම්පත් බැංකුව
சம்பத் வங்கி
Sampath Bank
UNION BANK
Amãna Bank
It's Your Bank

Same day bank transfer

No One Beat Our Rate

THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175

(03) 87649143 0406409403
royalinfomoney@gmail.com

# GRACE GROCERY

## INDIAN AND SRILANKAN GROCERY

**Our Current Location**

Casey Central (Narre Warren) and Clyde North next to ALDI/Bunnings

**Our New Locations Opening Soon**

- Mambourin Shopping Centre (Mambourin) - 2025 / 
- Farm Gate Local (Clyde) - 2025
- Ramlegh Shopping Centre (Clyde) - 2025 / 
- Orana Shopping Centre (Clyde) - 2026

# அணையா விளக்கு போராட்டத்தில் நடந்தது என்ன?

## நேரடி ரிப்போட்!



● ஆர். சுகந்தன்

செம்மணி மனிதப் புதைகுழி மீதான இருள் நீங்கவும், வலிந்து காணாமலாக்கப் பட்டோர் விடயத்திற்கு சர்வ தேச நீதி கோரியும் யாழ்ப்பா ணத்தின் செம்மணி பகுதி யில் “அணையா விளக்கு” போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

“மக்கள் செயல்” என்கிற தன்னார்வ இளையோர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்போராட்டமானது கடந்த மாதம் 23, 24, 25 ஆம் திகதிகளில் இடம்பெற்றது.

இப்போராட்டத்தில் வலிந்து காணாம லாக்கப்பட்டவர்களின் உறவுகள், மதங்களின் தலைவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், சிவில் சமூகங்களின் பிரதிநிதிகள், அரசியல்வாதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

**அதென்ன அணையா விளக்கு?**

தமிழர்களது வழிபாட்டு மரபில் அணையா விளக்கு என்றொரு நம்பிக்கை சார்ந்த வழிபாடு உண்டு. அதாவது ஒருவர் தான் நினைக்கின்ற காரியம் நிகழ்ந்தேறும் வரைக்கும் விரும்பிய தெய்வத்திடம் நெய் அல்லது தேங்காய் எண் ணெயை ஊற்றி விளக்கொன்றை தொடர்ச்சியாக சுடர விடுதலே இந்த மரபு.

தன் மொத்த தியானத்தையும் ஒளியில் நிறுத்தி, காற்றில் அது அணைந்து போகா மல் காப்பதே இதில் இடம்பெறும் மனிதக் காரியமாகும். அதாவது நிறைவேறவேண்டிய ஒரு காரியத்தை மனதில் நிறுத்தி எத்தனை பொழுதுகளாயினும் அதே தியானத்தில் இருத்தல்தான் இங்கே இடம்பெறுகின்றது.

ஒரு விடயத்தை விடாப்பிடியாக மன தில் நிறுத்திப் போராடினால் அதனை அடை யலாம் என்கிற உளம்சார்ந்த நம்பிக்கை இங்கே அணையா விளக்காக குறியீடுபடுத் தப்படுகின்றது. இந்தப் பிண்ணனி கொண்ட அணையா விளக்கினை செம்மணி மனிதப் புதைகுழி விடயத்திற்கு நீதி கோரியும், வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விடயத்திற்கு சர்வ தேச நீதி கோரியும் நடத்தப்பட்ட அறவழி போராட்டத்திற்கு குறியீடாக போராட்டக் காரர்கள் ஏற்றியுள்ளனர்.

23ஆம் திகதி காலை 10.10 மணிக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவு களால் ஏற்றப்பட்ட இந்த விளக்கானது தொடர்ந்து மூன்று தினங்கள் இரவு பகலாக எரிந்தது. செம்மணி வெளியில் வீசிய கடுங் காற்றிலிருந்தும், எண்ணெய், திரி தீர்ந்தும் அணைந்து போகாமல் இருக்க போராட்டக் காரர்கள் சுடரைக் காவல்காத்தனர். போராட் டத்திற்கு வரும் மக்களிடமிருந்து சிறுகச்சிறுக சேகரிக்கப்பட்ட தேங்காய் எண்ணெயும், திரியும் அணையா விளக்கு இரவு பகலாக நின்றெரிய காரணமாகியது.

போராட்டம் நிறைவுற்ற மூன்றாம் நாள் அணையா விளக்கு போராட்டக்களத்திலிருந்து அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் எடுத்துச் செல்லப்பட்டு, தியாகி திலீபன் அவர்களின் நினைவுத் தூபியிடத்திலும், உலகத் தமிழா ராய்ச்சி மாநாட்டுப் படுகொலை நினைவிடத் திலும், தந்தை செல்வா நினைவிடத்திலும், யாழ். நூலக வாயிலிலும், படுகொலை செய் யப்பட்ட ஊடகவியலாளர்கள் நினைவிடத் திலும் தீக்கற்றைகளாகப் பிரித்து வைக்கப் பட்டது. அணையா விளக்கின் எஞ்சி தீயா னது, விளக்கேற்றப்பட்ட மண் சட்டியோடு சேர்த்து தொண்டமானாற்றுக் கடலில் போராட்டக்காரர்களால் சேர்க்கப்பட்டது.

**கவனத்தை ஈர்த்த செப்புப் பட்டயம்**

கடந்த பதினைந்தாண்டுகளாக தமிழ் மக்கள் அறவழியில் போராடிவருகின்றனர். ஒவ்வொரு போராட்டத்தின் முடிவிலும், அப்போராட்டத்தின்போது வலியுறுத்தப்படும் கோரிக்கைகளை உள்ளடக்கிய மகஜர் தாள் களில் பிரதியெடுக்கப்பட்டு உரிய இடங்க ளுக்கு அனுப்பி வைக்கப்படும் அல்லது வழங்கி வைக்கப்படும்.

தாள்களில் அனுப்பப்படுகின்ற கோரிக்கை கள் நிறைவேற்றப்படுகிறதா? அவற்றுக்கு என்னாகிறது, எங்கே வீசப்படுகின்றது என்ப தெல்லாம் புரியாத புதிராகவே இருந்து வரு கின்றது. இந்நிலையில் அணையா விளக்குப் போராட்டத்தில் வலியுறுத்தப்பட்ட பின்வரும் ஆறு அம்சக் கோரிக்கைளும்,

1. செம்மணி உள்ளிட்ட மனிதப் புதை குழிகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அலுவலகத்தின் கீழ் இயங்கும் இலங்கை பொறுப்புக்கூறல் செயற்றிட்ட அதிகாரிகள் தொழில்நுட்ப ரீதியான உள்ளீட்டை வழங்கவும் கண்காணிப் பில் ஈடுபடவும் இலங்கை அரசாங்கம் அனும திக்க வேண்டும்.

2. ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை யின் 46/1 தீர்மானத்திற்கமைய இனப்படு கொலை, போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் ஆதாரங்களை சேகரிப்பதற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அலுவலகத்தின் கீழ் இயங்கும் இலங்கை பொறுப்புக்கூறல் செயற்திட்ட அதிகாரிகளுக்கு தங்கு தடையற்ற அனுமதி இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படல் வேண்டும்.

3. மனித புதைகுழி அகழ்வுப் பணிகளில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் தமது சமூகத்தின் வளங்களை பெற்று அதன் மூலம் சுதந்திரமான தொழில்நுட்ப உள்ளீட்டைப் பெற்றுக்கொள்ள இலங்கை அரசாங்கம் அனுமதிக்குமாறு அழுத்தம் வழங்க வேண்டும்.

4. புதைகுழி அகழ்வுப் பணி தொடர் பில் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் கோரப்படும் அனைத்து நிதி கோரிக்கை களையும் இலங்கை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் என அழுத்தம் கொடுக்க வேண்டும்.

5. இதுவரை வெளிவந்த தகவல்கள் பிர காரம் அனைத்து புதைகுழிகள் தொடர்பிலும் சர்வதேச கண்காணிப்புடனான அகழ்வுக்கு இலங்கை அரசாங்கம் அனுமதிக்க வேண்டும் என வலியுறுத்த வேண்டும்.

6. இலங்கையில் பொறுப்புக்கூறல் விவ காரம் தொடர்பில் ஐ.நா பொதுச்சபை ஊடாக ஐ.நா பாதுகாப்பு அவைக்கு விடயம் பாரப் படுத்தப்பட்டு அதனூடாக சர்வதேச குற்றவி யல் நீதிமன்ற விசாரணை ஒன்றை சாத்தியப் படுத்துவதற்கான செயற்பாடுகளை ஐ.நா மனித உரிமை ஆணையாளர் எதிர்வரும் ஐ.நா மனித உரிமை பேரவை கூட்டத்தில் முடுக்கி விடவேண்டும்.

வழமை போல தாளில் பிரதியெடுக்கப் படாது, செப்புத்தகட்டில் பிரதியெடுக்கப் பட்டு, போராட்ட வளாகத்தில் இருக்கும் செம்மணி சிந்துபாத்தி மனிதப் புதைகுழி யிடத்தில் வைத்து வலிந்து காணாமலாக்கப் பட்டவர்களின் உறவுகளால் ஐ.நா மனிதவுரி மைகள் ஆணையாளரிடம் கையளிக்கப்பட் டது. இந்த கோரிக்கைப் பட்டயமானது செப்பில் பொறிக்கப்பட்டதால் அதனைத் தூக்கியெறிந்தாலும்கூட மண்ணில் ஒரு வரலாற்றுச் சான்றாக காலம் கடந்து கிடக்கும் என்கிற நம்பிக்கையில் போராட்டக்காரர்களால் வடிவமைக்கப்பட்டது.

**1996 ஆம் ஆண்டுகளை நினைவுபடுத்திய கண்காட்சி**

போராட்ட களத்தில் 1996, 1997ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தில் வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான செய்திகளும், தரவுகளும், படங்களும், மாணவி கிருசாந்தி படுகொலை தொடர்பான செய்திகளை உள்ளடக்கிய ஆவணங்களும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இந்த ஆவணக் கண்காட்சியைப் பெருந்திர ளான மக்கள் பார்வையிட்டுச் சென்றன. அதேபோல 1996ஆம் ஆண்டில் மாணவி கிருசாந்தி படுகொலைசெய்யப்பட்டு புதைக் கப்பட்ட காலம் தொடக்கம், அது அகழப்பட்ட காலம் வரைக்கும் அங்கேயே தங்கிநின்று செய்திகளைச் சேகரித்து வழங்கிய ஊடக வியலாளர் பிரேமானந்த் அவர்களின் உரை யும், 1996ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கத்தை உருவாக்கிய விஜயகுமார் என்பவரின் உரையும் கவனத்தை ஈர்ப்பதாக அமைந்தது.

இரவு வேளைகளில் இலங்கை உள்ளிட்ட பல்வேறு நாடுகளிலிலும் வலிந்து காணாம லாக்கப்பட்டோர் விடயத்தை மையப்படுத்தி வெளியான ஆவணப்படங்களும், கிருசாந்தி படுகொலை தொடர்பில் எழுத்தாளர் ஜே.கேயி னால் எழுதப்பட்ட கதை வாசிப்பும், செம்மணி படுகொலை தொடர்பில் எழுதப்பட்டிருந்த கவிதைகள் வாசிப்பும் இடம்பெற்றது.

**கையெழுத்துப் போராட்டம்**

போராட்டம் இடம்பெற்ற மூன்று நாட் களிலும், மேற்குறித்த ஆறு அம்சக் கோரிக்கை களையும் முன்வைத்து கையெழுத்து சேகரிப்பும் இடம்பெற்றது. கையெழுத்திடலோடு, செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பிலும், வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர் பிலும் கையெழுத்திடுபவர்கள் கருதும் விட யத்தை சிறு குறிப்புரையாகவும் பெறப்பட்டன. அந்தக் குறிப்புரைகள் போராட்டக்காரர்களால் ஆவணத்தொகுப்பாக வெளியிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

**பலரையும் கண்கலங்க வைத்த இரத்தக்கறை படிந்த பள்ளிச்சீருடை**

போராட்ட வளாகத்திற்கு முன்பாக இரா ணுவ காவலரண் போன்ற ஒரு அமைப்பு உரு வாக்கப்பட்டு, அதற்கு முட்கம்பிகள் பிணையப்பட்டு அந்த முட்கம்பிக்கு மேலாக இரத்த வர்ணம் பூசப்பட்ட பள்ளிச் சீருடை ஒன்று காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. கிரிசாந்தியை இறுதியாக இராணுவம் வழி மறித்த காவலரண் அமைந்திருந்த பகுதியில் அமைக்கப்பட்ட இந்தக் காட்சியானது போராட வந்த மக்களையும், வீதியால் சென்று வந்தவர்களையும் கண்கலங்க வைத்தது. கிருசாந்தியின் நினைவுகளை மீளக்கொணர்வ தாகவும் இருந்தது.

**இறுதி நாள் போராட்டத்தில் ஏற்பட்ட குழப்பங்கள்**

அணையா விளக்குப் போராட்டம் படிப் படியாக மக்களைச் சென்றடைந்தமையை அவதானிக்க முடிந்தது. எனவே மூன்றாம் நாள் பெருமளவிலான மக்கள் தன்னார்வமாகப் போராட்ட களத்தில் குழுமினர்.

போராட்டத்திற்கு அனைவரையும் வந்து ஆதரவுதருமாறு ஏற்பாட்டக்காரர்களால் அறிவிக்கப்பட்டமையால் கட்சி பேதங்கள் கடந்து அரசியல்வாதிகளும் கலந்துகொண் டிருந்தனர்.

இவ்வாறு தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ.வி.கே.சிவிஞானமும், மட்டக் களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியனும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். அஞ்சலி செலுத்திவிட்டு போராட்டகளத்தைவிட்டு அவர்கள் வெளியேறும்போது, இலங்கை தமிழரசுக் கட்சியின் மேற்குறித்த இரண்டு தலைவர்கள் மீதும் அதிருப்தி கொண்ட தமிழ ரசுக் கட்சியின் ஆதரவாளர்கள் கொந்த ளிப்பில் ஈடுபட்டனர். இருவரையும் போராட்ட களத்தை விட்டு வெளியேறுமாறு கூச்சலிட்ட னர். இதனால் சற்றுநேரம் போராட்ட களத்திற்கு வெளியே குழப்பமான சூழல் ஏற்பட்டது.

அதனையடுத்து போராட்ட களத்திற்கு வருகை தந்த கடற்றொழில் அமைச்சர் இராம லிங்கம் சந்திரசேகர், தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயானந்த மூர்த்தி ஆகியோர் தமது மலரஞ்சலியை அணையா விளக்கிற்கு செலுத்தினர். அவர்கள் அஞ்சலி செலுத்தும்போதே சில வலையொ ளிப்பதிவர்கள் (Youtubers) அவர்களை அஞ்சலி செலுத்தவிடாது கூச்சலிட்டனர். உடனடியாக அவ்விடத்தை விட்டு வெளி யேறுமாறு கொந்தளித்தனர்.

அவர்களைத் தொடர்ந்து போராட்ட களத்திற்கு வெளியே நின்றிருந்த அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களும் சம்பவ இடத்திற்கு வந்து கூச்சலிட்டனர். இதனால் மீண்டும் போராட்டகளம் பரபரப்பானது. ஒரு கட் டத்தில் அவ்விடத்திலிருந்து கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரனும், நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயானந்தமூர்த்தியும் அங்கிருந்து வெளியேறினர்.

மாலையில் போராட்ட களத்திற்கு வந்திறங் கிய தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரனுக்கும் எதிர்ப்பு வெளியிடப்பட்டது. அவரும் முரண்பாட்டு டன் அவ்விடத்திலிருந்து வெளியேறினார்.

**போராட்டத்தைக் குழப்பிய வலையொளியாளர்கள்**

இப்போராட்ட களத்தில் 200இற்கும் மேற்பட்ட வலையொளிப் பதிவாளர்கள் கலந்துகொண்டிருந்தனர். அனைவரும் தொலை பேசிகளையும், சிறிய வகை கெமராக்களையும் பயன்படுத்தி காணொளிகளைப் பதிவு செய்தனர். இப்போராட்டத்தின்போது காணொளியாகப் பதிவு செய்யப் பல்வேறு விடயங்கள் இருந்தன.

காணாமலாக்கப்பட்டவர்களின் உறவு கள் பல்வேறு சாட்சியங்களை கையில் வைத்தி ருந்தனர். அவற்றில் எதனையும் பதிவுசெய்யாத வலையொளிப்பதிவாளர்கள் பிரச்சினைகளை ஏற்படுத்தி அதனை காணொளியாக்கி வெளி யிடுவதை ஒரு வேலையாகவே செய்தமையை அவதானிக்க முடிந்தது. நன்கு திட்டமிட்ட ரீதியில் அவ்விடத்தில் செயற்பட்ட வலை யொளிப்பதிவர்கள்தான் கடற்றொழில் அமைச் சரை அவ்விடத்தைவிட்டு வெளியேற்றத் திட்டமிட்டனர். அப்படி அவர் வெளி யேற்றப்படுவதைக் காணொளியாக்கி வெளியிட்டால், தமது Youtube தளங்களுக்கு அதிக பார்வைகளைப் பெறலாம் என்பது அவர்களின் திட்டமாக இருந்தது. அதனை அவ்விடத்தில் கனகச்சிதமாக செய்தமையை நேடியாக அவதானிக்கமுடிந்தது. அது மாத்திரமல்லாது, போராட்டத்தின் இறுதி கனங்களில் மிகுந்த சனநெருக்கடிக்கு மத்தியில் அணையா விளக்கிற்கு அஞ்சலி செலுத்த வந்த ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையா ளரை அஞ்சலி செலுத்தவிடாது குழப்பினர். அனைத்து விதமான ஊடக அறங்களையும் மீறி, மக்களின் நியாயமான கோரிக்கைகளை கையளிக்கக்கூட வழிவிடாது இடையூறு ஏற்படுத்தினர்.

இவ்வேளையில் அச்சு, தொலைக்காட்சி ஊடகங்களுக்காக செய்தி சேகரிப்பதற்கென அங்கு வந்திருந்த உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் ஒரு புகைப்படத்தைக்கூட எடுக்கமுடியாது திண்டாடியமையை காணக் கூடியதாக இருந்தது. பிரபலமான ஆங்கில ஊடகமொன்றின் புகைப்படச் செய்தியாளர் ஒரு புகைப்படத்தைக்கூட எடுக்கமுடியாது அந்தப் போராட்ட களத்திலிருந்தே வெளி யேறியமையும் அவதானிக்கமுடிந்தது.

இவ்வளவு நெருக்குவாரங்களுக்கு மத்தி யிலும் போராட்டக்காரர்களால் ஐ.நா மனித வுரிமை ஆணையாளர் வோல்கர் டர்க் போராட்ட களத்திற்கு அழைத்துவரப்பட்டார். வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் முன்பாக அணையா விளக்கிற்கு மலரஞ்சலி செலுத்தினார். போராட்டக்காரர்கள் வலியுறுத் திய மேற்குறித்த ஆறு அம்சக் கோரிக்கைகளை உள்ளடக்கிய செப்புப் பட்டயத்தை அன்போடு வாங்கிக்கொண்டார்.


SST
SPICES
& Things
Indian | Sri lankan | South Asian
Groceries & Take away
At SST Spices & Things, we pride ourselves on delivering top-notch customer service and offering high-quality food and groceries. Whether you're picking up your favorite spices, fresh produce, or delicious takeaways, we've got you covered!
7 days
10 am to 8 pm
SST Spices & Things
Where quality meets community
Location:
79 McIntyre Rd,
Sunshine North VIC 3020
Contact:
03 9417 2517
Email:
sstspicesnthings@gmail.com




# தடைகளைத் தாண்டி தசாப்தத்தை நோக்கி எதிரொலி!

பொறுப்பையும், பொதுநலனையும் இரு கண்கள்போல் கருதி ஊடக உலகில் வீறுநடை போடும் 'எதிரொலி", தடம் மாறாது – தமிழ்த் தேசியத்தை விட்டுக்கொடுக்காது – புலம் பெயர் தேசத்தில் ஒலிக்கும் ஈழத் தமிழர்களின் குரலாக 9 ஆவது ஆண்டில் காலடி வைக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

எதிரொலி வாசகர்கள், வர்த்தகப் பங்காளர்கள், விளம்பரதாரர்கள், எழுத்தாளர்கள், நிருபர்கள், ஆசிரியர்பீட உறுப்பினர்கள், கணினிப் பிரிவு மற்றும் விநியோகஸ்தர்கள் இன்றி இந்த பயணம் இவ்வளவு தூரத்துக்கு சாத்தியப்பட்டிருக்காது என்பதே உண்மை. ஆக அவர்களுக்கு நன்றிகளை சமர்ப்பிக்கின்றோம். இன்று போல் என்றும் ஒத்துழைப்பு தொடரும் என உறுதியாக நம்புகின்றோம்.

ஆஸ்திரேலியாவுக்கு தமிழர்கள் புலம்பெயர்ந்த காலம் முதல் பல பத்திரிகைகள் சஞ்சிகைகள் என பல்வேறு தமிழ் இதழ்கள் வெளியிடப்பட்டிருப்பினும் அவை நீடித்து நிலைக்கவில்லை. பல்வேறு தேவைகளுக்காக ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகைகள் கால ஓட்டத்தின் மாற்றங்களுக்கு முகம்கொடுக்க முடியாது மறைந்து – மாயமாகின.

தற்போதைய தொழில்நுட்பப் புரட்சி மற்றும் 'ஏஐ' யுகத்தில் அச்சு ஊடகங்களின் இருப்பென்பது ஆட்டம் கண்டு வருகின்றது என்றே கூறவேண்டும். அத்துடன் ஆஸ்திரேலியாவின் அச்சு ஊடகங்கள் பல , பக்கங்கள் பலவற்றை சுருக்கி இணைய வழி செய்தி வழங்கலை ஆரம்பித்து, அந்த வழியில் பயணித்துவருகின்றன.

நாளாந்த அச்சு ஊடகங்களே தமது பயணத்தில் மூச்சிரைத்துக் கொண்டிருந்த காலகட்டத்தில் தான் எதிரொலி மாத பத்திரிகை மலர்ந்தது. இன்று 8 வருடங்களைக் கடந்து 9 ஆவது ஆண்டில் காலடி வைக்கிறது.

இக்காலப்பகுதிக்குள் நாம் சந்தித்த சவால்கள் ஏராளம். இருந்தபோதிலும் தடைகளைத் தாண்டி – கொள்கை மாறாது பயணம் தொடர்வது மகிழ்ச்சியளிக்கின்றது.

எதிரொலியின் ஊடகப் பயணத்தை மலர்தூவி வரவேற்பவர்களுக்கு மத்தியில் காலைவாரும் நோக்கில் கட்டுக்கதைகளை கட்டவிழ்த்துவிட்டவர்களும் இருக்கவே செய்கின்றனர். ஏன் துரோகி முத்திரைக்கூட குத்தி அகம் மகிழ்ந்தனர். எம்மை முடக்குவதற்கு எல்லாவித சதிகளிலும் ஈடுபட்டனர். இன்றளவிலும் அது கைவிடவில்லை. அதேபோல அவர்கள் முயற்சியை கைவிடவும் இல்லை. எது எப்படி இருந்தாலும் நீதிக்கான – உண்மைக்கான எமது குரலை ஒருபோதும் ஒடுக்க முடியாது என்பதை உறுதியாக கூறி வைக்க விரும்புகின்றோம்.

மறுபுறத்தில் எல்லாவித விமர்சனங்களையும் நாம் நிராகரிக்கவில்லை. எமது பயணம் முன்னோக்கி செல்வதற்கு விமர்சனங்களையும் படிக்கற்களாகவே பார்க்கின்றோம். திருத்த வேண்டிய இடங்களில் திருத்தங்களை செய்தோம். இன்றளவிலும் விமர்சனங்களை ஏற்று – எமது தரப்பில் தவறுகள் இருந்தால் அவற்றை திருத்திக்கொள்வதற்கும், புதிய யோசனைகளை உள்வாங்குவதற்கும் நாம் தயாராகவே இருக்கின்றோம்.

பொறுப்புடன் எதிரொலியின் பயணம் தொடரும். அதற்கு வாசகர்களின் ஆசி, விளம்பரதாரர்களின் ஒத்துழைப்பு கடந்தகாலங்களைவிடவும் அதிகம் கிடைக்கும் என நம்புகின்றோம். அதற்காக அழைப்பு விடுக்கின்றோம்.









# இளைய மாணவர் நாடக விழா

பாரதி பள்ளியின் கிரான்பேர்ன், பக்கெனாம், பெரிக், டான்டினொங் ஆகிய வளாகங்களின் இளைய மாணவர் நாடக விழா ஜூலை மாதம் 6ம் திகதி, பெரிக் Tony Sheumack Centre for Performing Arts இல் மண்டபம் நிறைந்த பார்வையாளர்களுடன் நடைபெற்றது. 8 வயதுக்குட்பட்டவர்களான, 250 மாணவர்களுக்கு மேல் மேடையேறினர். 8 நாடகக் குழுக்கள் அரங்கில் வந்து, அழகான நாடகங்களை நடித்துக் காட்டிப் பார்வையாளர்களின் மனங்களில் இடம்பிடித்தனர். மழலைக் குழந்தைகள், அருமையான பாடல்களைப் பாடியும், ஆடியும், நடித்தும் காட்டினர்.

பங்கு கொண்ட மாணவர் குழுக்களின் படங்களை, அவர்களின் ஆசிரியர்களுடன் சேர்த்து இங்கே காண்கிறீர்கள்.

குறித்த நேரம் தவறாது தொடங்கிய இந்த விழா, சரியாக 8 மணிக்கு, குறித்த நேரத்துக்கு ஒரு நிமிடமும் பிந்தாமல் முடிவடைந்தமை பலரது கவனத்தையும் ஈர்த்தது.















எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI



எதிரொலி
Ethiroli
உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்

ஒன்பதாவது ஆண்டில்
காலடி எடுத்து வைக்கும்
எதிரொலி செய்திகள்
மற்றும்
அவுஸ்திரேலிய இதழ்களை
ethiroli.com
ஊடாகவும்
பார்வையிடலாம்.



வாசகர்களின் வாசல்களை தேடிவரும் எதிரொலி

வருடாந்தம்
$120




ஆஸ்திரேலியாவில் வெளிவரும்
ஒரே தமிழ்பத்திரிகை
உங்கள் வாசல்களுக்கு
தபால் மூலம் தேடிவருகிறது

தொடர்புகளுக்கு:
தொ.பே: 1800960162
Email: ethirolimelbourne@gmail.com





# குர்திஷ் போராளிகளின் ஆயுத களைவு! துருக்கியின் ஆதிக்க விஸ்தரிப்பின் வெற்றியா?

•ஐங்கரன் விக்கினேஸ்வரா

குர்திஷ் மக்களின் உரிமைகளுக்காக அமைதியான பாதையை நாடும் (PKK)பி.கே.கே அமைப்பு ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவதாக அறிவித்துள்ளது.

குர்திஷ்தான் தொழிலாளர் கட்சி அல்லது பி.கே.கே, அதன் நிறுவன அமைப்பைக் கலைத்து, துருக்கிக்கு எதிரான பல தசாப்த கால ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவருவதாக இவ்வருட ஆரம்பத்தில் அறிவித்தது.

குர்திஷ் போராளிகள் ஆயுதங்களை களைந்து சரணடையத் தொடங்கி விட்டனர். துருக்கியுடனான சமாதானத்தை நோக்கிய வரலாற்றுச் சிறப்புமிக்க படி இது என்றும் அறிவித்துள்ளனர்.

### ஈராக்கில் அடையாள ஆயுத களைவு:

துருக்கிய அரசுக்கு எதிரான நாற்பது ஆண்டு கால ஆயுதப் போராட்டத்திற்குப் பிறகு, தடை செய்யப்பட்ட குர்திஷ் அமைப்பான பி.கே.கே, ஆயுதக் குறைப்பின் தொடக்கத்தைக் குறிக்கும் வகையில் வெள்ளிக்கிழமை ஈராக்கின் சுலைமானியாவில் ஒரு அடையாள விழா நடந்துள்ளது.




துருக்கிய ஊடகங்களின்படி, கோடை காலம் முழுவதும் நீடிக்கும் இந்த செயல்முறை, கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகளின் கீழ் மற்றும் துருக்கியில் உள்ள குர்திஷ் ஆதரவு எதிர்க்கட்சியின் பிரதிநிதிகள் மற்றும் ஊடகங்களின் கண்காணிப்பின் கீழ் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

1984ஆம் ஆண்டு மோதல் தொடங்கியதிலிருந்து, சுமார் 40,000 பேர் கொல்லப்பட்டுள்ளனர். துருக்கி, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பிரிட்டனால் இந்த அமைப்பு PKK பயங்கரவாத அமைப்பாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், இந்த ஆயுதக் குறைப்பின் தாக்கம் துருக்கியின் எல்லைகளுக்கு அப்பால் - ஈராக், சிரியா மற்றும் ஈரானிலும் உணரப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சிறையில் இருந்து ஒரு வீடியோ செய்தியில், PKK தலைவர் அப்துல்லா ஓஜலான், இது “ஆயுத மோதலில் இருந்து ஜனநாயக அரசியல் மற்றும் சட்டத்திற்கு தன்னார்வ மாற்றம்” என்று கூறியுள்ளார்.

இது முதல் சமாதான முயற்சி அல்ல என்பது அறியப்படுகிறது, ஆனால் இது ஒரு மார்க்சிஸ்ட் சுதந்திர இயக்கமாகத் தொடங்கி பின்னர் துருக்கியின் மக்கள்தொகையில் சுமார் 20% ஆக இருக்கும் குர்துகளுக்கு சுயாட்சியைக் கோரிய மோதலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான மிகவும் யதார்த்தமான நம்பிக்கையாக இப்போது பார்க்கப்படுகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

துருக்கிய அரசாங்கம், PKK-ஐ முழுமையாக நிராயுதபாணியாக்காமல் பேச்சுவார்த்தை மேசைக்குத் திரும்பப் போவதில்லை என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளது. அதுவே இப்போது நடக்கவிருப்பதாகத் தெரிகிறது.

### வரலாற்று மாற்றமான நிகழ்வு:

பல்லாயிரக்கணக்கான மக்களின் மரணத்திற்கு வழிவகுத்த 40 ஆண்டுகளுக்கும் மேலான மோதலுக்குப் பிறகு ஒரு வரலாற்று மாற்றத்தைக் குறிக்கிறது.

இவ்வருட மே 12 அன்று அறிவிக்கப்பட்ட இந்த முடிவு, பிராந்தியத்தின் மிக நீண்ட மற்றும் கொடிய கிளர்ச்சிகளில் ஒன்றை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஒரு குறிப்பிடத்தக்க படியைக் குறிக்கிறது. இப்போது குர்திஷ் பிரச்சினையை ஜனநாயக வழிமுறைகள் மூலம் தீர்க்க வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளது.



வடக்கு ஈராக்கில் நடைபெற்ற இக்குழுவின் 12வது மாநாட்டின் போது இந்த முடிவு எடுக்கப்பட்டது. மேலும் சிறையில் அடைக்கப்பட்ட அதன் தலைவர் அப்துல்லா ஓஜலனின் அழைப்புக்கு பதிலளிக்கும் விதமாக இது வந்துள்ளது.

12வது PKK காங்கிரஸ், அதன் நிறுவன அமைப்பைக் கலைத்து, அதன் ஆயுதப் போராட்ட முறையை முடிவுக்குக் கொண்டுவர முடிவு செய்துள்ளது என்று அந்தக் குழு ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது. இதன் விளைவாக, ‘PKK’ என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தும் முறையாக நிறுத்தப்பட்டன.

### ஜனநாயக வழிமூலம் தீர்வு:

1999 முதல் இஸ்தான்புல்லுக்கு அருகிலுள்ள ஒரு தீவில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஓஜலனால் ஆயுத கலைப்பு மற்றும் நிராயுதபாணியாக்கத்தின் நடைமுறை செயல்முறை நிர்வகிக்கப்பட்டு மேற்பார்வையிடப்படும் என்று பி.கே.கே தெரிவித்துள்ளது.

மாநாட்டு பிரகடனத்தின்படி, PKK இன் போராட்டம் ஜனநாயக அரசியல் மூலம் குர்திஷ் பிரச்சினையை தீர்க்கும் நிலைக்கு கொண்டு வந்தது, இதன் மூலம் அதன் வரலாற்று பணியை தொடர உள்ளது.

ஆனால் துருக்கியில் மக்கள் ஜனநாயகக் கட்சி (HDP) வடிவில் ஏற்கனவே ஒரு தீவிர குர்திஷ் ஆதரவுக் கட்சி இருப்பதால், PKK தளபதிகள் துருக்கிய அரசியலில் நுழைவது சாத்தியமில்லை என்றும் தெரிகிறது.

இப்போதிலிருந்து குர்திஷ் அரசியல் கொரில்லா போர் மூலம் அல்ல, சட்ட அரசியல் மற்றும் துருக்கிய பாராளுமன்றம் மூலம் நடத்தப்படும் என்று அவர்கள் அர்த்தப்படுத்துகிறார்கள்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஒருதலைப்பட்ச போர்நிறுத்தத்தை அறிவித்து, அமைதி மற்றும் ஜனநாயக சமுதாயத்திற்கு வழி வகுக்கும் என்று கூறியது. ஆனால் அமைதி பேச்சுவார்த்தைகளுக்கான சட்ட கட்டமைப்பை உருவாக்குவது உள்ளிட்ட நிபந்தனைகளை விதித்தது.

அந்தக் குழுவின் அறிக்கை, அதன் பணி நிறைவடைந்ததாகக் கூறியதுடன், குர்திஷ் அரசியல் கட்சிகள் குர்திஷ் ஜனநாயகத்தை வளர்ப்பதில் தங்கள் பொறுப்புகளை நிறைவேற்றும் மற்றும் ஒரு குர்திஷ் ஜனநாயக தேசத்தை உருவாக்குவதை உறுதி செய்யும் என்று நம்பிக்கை தெரிவித்தது.

### பிளவுபட்ட குர்திஷ் குழுக்கள்:

பி.கே.கே தனது முடிவில் ஒற்றுமையாகத் தெரிந்தாலும், கடந்த காலங்களில் பிளவுபட்ட மற்றய குழுக்களுடன் அந்த அமைப்புக்கு பிரச்சினைகள் இருந்துள்ளன.

2004 ஆம் ஆண்டில் ஒஜலனின் தம்பி ஒஸ்மான் ஜலன் பிரிந்து சென்று தனது சொந்த கஅரசியல்-இராணுவக் குழுவை உருவாக்கினார்.

தற்போது ஈரான் போன்ற பிற நாடுகளில் உள்ள அமைப்பின் துணை நிறுவனங்கள் இந்த முடிவுக்குக் கட்டுப்படுமா அல்லது தங்கள் போராட்டத்தைத் தொடருமா என்பது ஒரு முக்கிய கேள்வியாகும்.

துருக்கியின் ஆளும் நீதி மற்றும் மேம்பாட்டுக் கட்சியின் (AKP) செய்தித் தொடர்பாளர் ஓமர் செலிக் PKKவின் நிராயுதபாணியாக்கி கலைக்கும் முடிவு உறுதியாகவும் முழுமையாகவும் PKK-வின் அனைத்து கிளைகளையும் உள்ளடக்கிய முறையில் செயல்படுத்தப்பட வேண்டும் என்று அறிவித்துள்ளார்.

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI

ஆடி 2025



# காசாவின் கண்ணை பறித்த இஸ்ரேல்!

## ஒரு இளம் பெண் ஊடகரின் வலி சுமந்த மரணம்!

● சபா.தயாபரன்

போர் மேகங்கள் சூழ்ந்து கொண்டிருக்கும் காசா நகரத்தின் அல் துஃபா பகுதியில் வசிக்கும் கூட்டுக் குடும்பம் அது . 2025 ஏப்ரல் 15 அன்று அடுத்து நடக்கப் போகும் பேரவலத்தை அறியாத மன நிலையில் அவர்களின் கடைசி நிமிடங்கள் நகர்ந்து கொண்டிருந்தன.

அன்று தான் அவர்களின் தலை விதியை தலைகீழாக மாற்றிப் போட்ட கொடூர நிகழ்வு ஒன்று அங்கே அரங்கேறி முடிகிறது.

அந்த கூட்டுக் குடும்பத்தின் வீட்டைக் குறிவைத்து இஸ்ரேலிய இராணுவம் வான்வழி தாக்குதலை நடத்தியது. அந்த தாக்குதலில் அந்த வீட்டில் இருந்த கர்ப்பிணி பெண் உட்பட பத்து உறவுகள் என்ன நடக்கிறது என்று அறியாத நிலையில் பரிதாபமாக பலியாகினார்கள்.

### என்ன நடந்தது....?

ஏன் இந்த வீட்டை மட்டும் குறிவைத்து இஸ்ரேலிய இராணுவம் தாக்குதலை நடத்த வேண்டும்? என பல கேள்விகள் எழுந்துள்ளன.

இஸ்ரேலிய வான்வழித் தாக்குதல் பாலஸ்தீனிய புகைப்பட பத்திரிகையாளரான பாத்திமா ஹசௌனாவை குறிவைத்தே நடத்தப்பட்டுள்ளது என மேற்படி வினாக்களுக்கு விடையாக கிடைக்கின்றது.

### யார் இந்த பாத்திமா ஹசௌனா,..?

காசாவில் கொடூர போர் ஏற்படுத்திய மக்களின் சிதறுண்ட வாழ்க்கையை அவற்றின் அன்றாட சோக வாழ்வியலை ஆவணப்படுத்தும் பணிக்காக அறியப்பட்ட துணிகரமான 25 வயதே நிரம்பிய புகைப்பட பத்திரிகையாளர் தான் அவர். அவர் ஒரு சமூக போராளி என்றே அறியப்பட்டவர்.

1999 ஆம் ஆண்டு காசா நகரில் பிறந்த அவர் காசாவில் உள்ள பயன்பாட்டு அறிவியல் பல்கலைக்கழகக் கல்லூரியில் மல்டிமீடியா பட்டம் பெற்றவர்.

பாத்திமா ஹசௌனா பிரெஞ்சு-ஈரானிய இயக்குனர் செபிதே ஃபார்சியின் ஆவணப்படத்தின் முக்கிய கதாநாயகியும் ஆவார். அவரை மையக் கருப்பொருளாகக் கொண்ட ஆவணப்படம் , கேன்ஸ் திரைப்பட விழாவில் திரையிடப்படுவதற்கு சில வாரங்களுக்கு முன்புதான் காசாவில் இஸ்ரேலிய வான்வழித் தாக்குதலில் இந்த சோகத்திலும் துயரமான இந்த கொலைச் சம்பவம் நடந்தேறியிருக்கிறது.

போர் மண்டலத்திற்குள் இருந்து யதார்த்தங்களை முன்வைத்து முக்கியமாக ஓங்கி ஒலித்த அந்த பாலஸ்தீனிய குரல் மரணத்தால் மௌனித்துப் போனது.

கேன்ஸ் திரைப்பட விழாவில் பார்வையாளர்களை மட்டுமல்ல சர்வதேச ஊடகத்துறையில் பல அதிர்வலைகளை ஏற்படுத்திய இந்தச் சம்பவம் உலக அரங்கில் பேசு பொருளானது.

ஆவணப்படத் திரைப்படத் தயாரிப்பாளர் செபிதே ஃபார்சி ஹசௌனாவின் படத்தை கேன்ஸ் விழாவில் உயர்த்திப் பிடித்த போது பார்வையாளர்கள் எழுந்து நின்று கைதட்டி அஞ்சலி செலுத்தியது அவரின் ஆளுமையை - அவர் மேல் வைத்திருந்த அபிமானத்தை வெளிக்காட்டி நின்றது.

'அவர் மிகவும் எளிமையானவர், மிகவும் திறமையானவர். தைரியமானவர். தான் எடுத்துக் கொண்ட பணியை நிறைவேற்ற எந்த கஷ்டமான சூழ்நிலைகளிலும் தயார் நிலையில் அவரின் பங்களிப்பு அபரிதமாக இருந்தது. அவர் இறப்பதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பு நான் அவளிடம் எங்கள் இருவரினதும் கூட்டு முயற்சியில் உருவாகிய படம் கேன்ஸ் திரைப்பட விழாவில் திரையிட இருப்பதாகவும், அதற்காக அவரை அழைக்கவும் பேசினேன்." என்று ஃபார்சி கூறினார்.

இஸ்ரேலினால் முற்றுகையிடப்பட்ட பாலஸ்தீனப் பகுதிக்குள் வெளிநாட்டு ஊடகங்கள் நுழைவதை இஸ்ரேல் தடை செய்திருந்த நிலையில், ஆவணப்படத் திரைப்படத் தயாரிப்பாளர் செபிதே ஃபார்சி கடந்த ஆண்டு வீடியோ அழைப்பு மூலம் ஹசோனாவைத் தொடர்பு கொண்டிருந்தார்.

பாலஸ்தீன மக்களின் சோகக் கதைகளை மக்கள் எதிர்நோக்கும் பட்டினிகள் மருத்துவ பற்றாக்குறையினால் குழந்தைகள் எதிர்நோக்கும் இறப்புகள், வீடுகள் இழந்து, உடமைகளை இழந்து அநாதரவான மக்களின் துயர்கள் இவைகளை உலகத்துடன் பகிர்ந்து கொள்ள விரும்புவதாகவும், சர்வதேசம் அதை அறிந்து அக்கறை கொள்வார்கள் என்று தான் நம்புவதாகவும் இதற்கு நீங்கள்தான் பொருத்தமானவர் என்று கூறி தனது ஆவணப்படம் பற்றி கலந்துரையாடுகிறார். இதற்கு பச்சைக் கொடி காட்டியுள்ளார் ஹசோனா.

போரின் அச்சுறுத்தல் ,மோசமான இணைய இணைப்பு , முரண்படும் விவாதங்கள் இவற்றின் மத்தியிலும் புன்னகையுடன் கூடிய அவளின் தைரியம், 18 மாதங்களுக்கும் மேலான உழைப்பின் பலன் , அதன் உரையாடல்கள் அடங்கிய ஒளிநாடாக்கள் "உங்கள் கைகளில் உங்கள் ஆன்மாவை வைத்து பயணிக்கவும்" என்ற ஆவணப்படம் ஹசௌனாவின் அயராத முயற்சியிலும் பல அபாயகரமான அவள் உயிருக்கே பாதகம் ஏற்படும் சூழ்நிலைகளிலும் அவளின் துணிகர பாரிய பங்களிப்புடனான ஒத்துழைப்போடும் திரைப்படத் தயாரிப்பாளர் செபிதே பார்சியினதும் கூட்டு முயற்சியாக அது உருவாக்கப்படுகின்றது.

பார்சிக்கும் ஹசௌனாவுக்கும் இடையிலான ஒளிப்பதிவு உரையாடல்களைச் சுற்றியே படம் வருகிறது. ஹசௌனாவே அதன் கருப்பொருளாகவும் இருக்கிறார். காசாவில் நடக்கும் நிகழ்வுகள் குறித்த பரந்த பார்வையுடன் ஆராய்ச்சி செய்யும் இயக்குனர் இளம் பெண்ணான ஹசௌனாவுடன் இணையும் போது அது ஒரு காத்திரமான ஆவணப்படம் உருவாகின்றது.

பாத்திமா ஹசௌனா, காசாவில் வாழ்க்கையின் கதையைச் சொல்ல தனது "காசாவின் கண்" என்று பலராலும் விமர்சிக்கப்பட்ட அவரது புகைப்படக்கருவியைப் பயன்படுத்தி இஸ்ரேலிய இராணுவத்தின் காசா பகுதியின் பொதுமக்கள் மீதான தாக்கம் ஹசௌனாவின் கண்களின் வழியாக காசாவின் யதார்த்த நிலையை படம்பிடித்ததில் தனது புகைப்பட பத்திரிகைக்காக பாத்திமா சர்வதேச அளவில் அங்கீகாரத்தைப் பெறுகிறார்.

அவர் பதிவுகள் நெஞ்சை துயரத்தால் நிறைக்கின்றன.

இஸ்ரேலிய குண்டுவீச்சில் ஒரு வயது குழந்தை உட்பட பதினான்கு உறவினர்களை இழந்ததை ஹசோனா விவரிக்கிறாள், அன்று அவளால் அந்த புகைப்படம் எடுக்கப்பட்ட போது தான் அடைந்த மன உளைச்சல்கள் போரின் உச்ச கட்ட கொடுமை என்பனவற்றை வார்த்தைகளால் விவரிக்கும் லாவகம் நெஞ்சைத் தொடுகிறது.

ஒரு சிறுமி இடிபாடுகளாக மாறிய ஒரு கோபுரத் தொகுதியின் முன் தனது தந்தையின் மடியில் கண்களில் ஒளி மங்க இருக்கிறாள்.

இன்னொன்றில், ஒரு சிறுவன் இரத்தம் தோய்ந்த நடைபாதையில் தண்ணீர் குழாய் மூலம் தனது சொந்த குடும்பத்தின் இரத்த எச்சங்களை சுத்தம் செய்ய முயற்சிப்பதன் காணொளிகள் கொடுமையிலும் கொடுமை.

கட்டிட இடிபாடுகள். வீடுகளை உறவுகளை இழந்து தவிக்கும் நிராதரவான மக்களின் சோகங்களை அவள் கமராவில் மீட்டெடுக்கப்படுகின்றன. பட்டினியால் சுற்றி வர இருக்கும் குழந்தைகளின் மனதை உலுப்பும் மரணங்கள் நெஞ்சைப் பிழிய வைக்கின்றன. இப்படி எத்தனையோ அழிவுகளின் பதிவுகள் மனதை குளமாக்கி நிற்கின்றன.

வான்வழி தாக்குதல்களின் கோர சம்பவங்களை பதிவு செய்த அவர் அதே கொடூர சம்பவம் தனக்கும் நடக்கும் என்று அவள் அப்போது அறிந்திருக்கவில்லை.

இஸ்ரேலிய இராணுவம் அவரது குடும்பத்தின் குடியிருப்பை குறிவைத்ததாக விசாரணை அறிக்கைகள் சுட்டிக்காட்டியுள்ளன, ஆயினும் இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகள் ஹமாஸ் போராளி அங்கு மறைந்திருந்தபடியாலே தாக்குதல் நடந்ததாக வழமையான சாக்குப் போக்கில் தங்களை நியாயப்படுத்துகின்றன.

வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் அல்லது ஊடகங்கள் ரஃபாவிற்குள் நுழைவதை இஸ்ரேலிய அரசாங்கம் தொடர்ந்து தடை செய்து வருவதால், ஹசௌனாவை போன்ற காசாவிற்குள் இருக்கும் பாலஸ்தீன பத்திரிகையாளர்கள்தான் வெளி உலகிற்கு காசாவின் உண்மை நிலவரங்களை தகவல் அளிக்கும் முக்கிய ஆதாரமாக செயல்படுகிறார்கள். இதையே ஊடகத்துறையினர் ஹசௌனாவின் புகைப்படங்களை "காசாவின் கண்" என்று விமர்சிக்கின்றனர்.

அவர் தனது மரணத்தை ஏற்கனவே அறிந்திருந்தார் என்ற கணிப்பில் அவர் இப்படி சொல்கிறார்.

"என் மரணம் வெறும் செய்தியாகவோ அல்லது ஒரு எண்ணாகவோ இருக்க விரும்பவில்லை, உலகம் கேட்கும் ஒரு மரணம், காலத்திலோ இடத்திலோ புதைக்க முடியாத ஒரு அற்புதமான மரணம் வேண்டும்" என்று தனது நண்பர்களுக்கு ஹசௌனா, கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் சமூக ஊடகங்களில் எழுதி பரபரப்பை உண்டாக்கி இருந்தார் . தீர்க்கதரிசனப் பார்வையுடனான அவர் ஆருடம் உண்மையில் நிஜமாகித்தான் போனது. ஆனால் அது மனிதத்தை நேசிக்கும் நபர்களுக்கு மரண வலியை கொடுக்கின்றது.

ஹசௌனா அடுத்த சில மாதங்களில் திருமணம் செய்து கொள்ளவிருந்தார் என்பது மற்றொரு சோக செய்தி.

"மனிதகுலம் மற்றும் உலகத்திற்காக மட்டுமல்லாமல், தனது குழந்தைகளுக்காகவும், தான் என்ன அனுபவித்தாள் என்பதை அறிய இந்த போரை ஆவணப்படுத்துவதாக தனது ஆன்மாவை எனக்குள் திறந்தபடி அவர் என்னிடம் கூறினார்," என்று திருமதி ஃபார்சி நினைவு கூர்ந்தார்.

"அந்த வார்த்தைகள்தான் இந்த ஆவணப்படத்தை முடிக்கின்றன, இப்போது குழந்தைகள் இருக்காது. அவள் போய்விட்டாள்.

பிரவுன் பல்கலைக்கழகத்தில் உள்ள வாட்சன் இன்ஸ்டிடியூட் ஃபார் இன்டர்நேஷனல் அண்ட் பப்ளிக் அஃபயர்ஸ்' இன் போர் செலவு திட்டத்தின் புதிய அறிக்கை காசாவில் போரினால் இறந்த ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை 232 என்று அறிவித்தது.

அதற்குள் சமூக ஊடகப் போராளியான ஃபாத்திமா ஹசௌனாவின் பெயரும் உள்ளடங்கிப் போனது பலஸ்தீன மக்களுக்கு மட்டுமல்ல ஊடகத்துறைக்கும் ஈடு செய்ய முடியாத ஒரு இழப்பு என்பதில் சற்றும் ஐயமில்லை.


தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்பேர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
LuckyJewelleryMelborne
luckysankaran@gmail.com
0387121974, 0415233284

# மண்ணை பிளந்து நீதி கோரும் ஆன்மாக்கள்!

ஜெரா

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு நாளாந்தம் புதிய பரபரப்புக்களை ஏற்படுத்திக்கொண்டே இருக்கின்றது. முல்லைத்தீவின் கொக்குத்தொடு வாயில் அகழப்பட்ட மனிதப் புதைகுழி வெளிப் படுத்திய பரபரப்புக்கள் சூடு ஆறும் முன்பே செம்மணி அடுத்தடுத்து பரபரப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது.

இலங்கையில் ஆட்சி மாறிவிட்டது, அமைதி திரும்பிவிட்டது, தெற்கோடு இணைந்து வாழத் தமிழர்கள் மனோநிலை ரீதியாகத் தயாராகிவிட்டார்கள், அதற்கு இயைந்தாற்போல தேசிய மக்கள் சக்தியின் சமதர்ம ஆட்சி அமைந்துவிட்டது என கருத்துப் பரப்பியோருக்கெல்லாம், செம்மணி முகத்திலறைந்திருக்கின்றது.

இந்நாட்டின் அரச படைகள் குரூரமான சித்திரவதைகளின் பின்னர் கொன்றொழித்து, அவசர அவசரமாக மண்ணில் புதைத்த வர்கள் ஆன்மா இலங்கையை இப்போதைக்கு அடங்கிப்போவதாக இல்லை. தொடர்ந்தும் இலங்கை மீது வலிந்து கட்டமைக்கப்படும் அத்தனை அரசியல் போலி பிம்பங்களையும் மண்ணில் புதைக்கப்பட்டவர்கள் உடைத்து நொருக்கிவிடுகின்றனர்.

மண்ணுக்குள் புதைக்கப்பட்ட பின்னரும் மண் பிளந்து நீதி கோரும் இந்த ஆன்மாக்கள், இலங்கை மீதான சர்வதேச நெருக்கடியைத் தோற்றுவிக்கின்றன. நிலையான சமாதானத்தைக் கேள்விக்குட்படுத்துகின்றன. இலங்கை பேசிவரும் போலியான ஜனநாயகத்தைத் தோலுரிக்கின்றன. இலங்கை தொடர்பிலான வழமையான பார்வையை சிதைக்கின்றன. இதுவரை காலமும் மனச்சாட்சியுள்ள சிங்கள மக்கள் மத்தியில் இருந்த போர் வெற்றி வாதம் குறித்த நினைப்பை ஆட்டங்காணச் செய்திருக்கின்றன.

### செம்மணி அகழ்வில் அச்சநிலை

மேற்குறித்த மாற்றங்களை நிகழ்த்திக்கொண்டிருக்கும் செம்மணி மனிதப் புதைகுழியில் இக்கட்டுரை எழுதப்படும் வரையில் 65 மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் 15 வரையிலான எலும்புக்கூடுகள் சிறார்களினுடையதாக இருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகின்றது. எலும்புக்கூடுகளின் அளவு சார்ந்த விடயங்களை அவதானித்தே அவை சிறுவர்களினுடையதாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கின்றனர். தற்போது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள இரண்டாம் கட்ட அகழ்வுக்காலம் 45 நாட்களாக வரையறுக்கப்பட்டுள்ளதால், அகழ்வின் முடிவுக் காலத்தில் செம்மணியில் மிகப் பாரிய மனிதப்புதைகுழி கண்டுபிடிக்கப்படும் என எதிர்பார்க்கின்றனர்.

இதேபோக்கில் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டால், செம்மணி பகுதியில் கும்பல்கும்பலாக மனித எச்சங்கள் மீட்கப்படலாம் என்கிற அச்சம்கூட கடந்தவாரம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

### அதிர்ச்சியை ஏற்படுத்திய நீலப் பை

கடந்த வாரம் செம்மணி பகுதியில் அகழ்வுப் பணிகள் மேற்கொள் ளப்படும் வரை, மனித எலும்புக்கூடுகளைத் தவிர வேறு எவ்வித தடயப்பொருட்களும் கண்டுபிடிக்கப்படவில்லை. உரோமங்களோ, எலும்புக்கூடுகளில் கொலைசெய்யப்பட்டமைக்கான தடயங் களோ கண்டுபிடிக்கப்படவில்லை. மீட்கப்படுகின்ற மனித எச்சங்களிலிருந்து, அவை குறித்த மரணங்கள் எப்படி நிகழ்ந்த என்பதைக் கண்டுபிடிப்பதே சிரமானது என்ற கருத்துக்கள் பொதுவெளியில் பரவியுள்ளன. இந்நிலையில் கடந்த வாரம் இடம்பெற்ற அகழ்வின்போது சிறுவர் ஒருவரது என சந்தேகிக் கப்படும் எலும்புக்கூட்டோடு இணைந்த வகையில் நீல நிற பை ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது.

போர் காலத்தில் வடக்கு, கிழக்கில் யுனிசெவ் நிறுவனம் பாடசாலை சிறார்களுக்கு நீல நிற புத்தகப் பைகளை இலவசமாக வழங்கியது. அந்தப் பையின் வர்ணத்தையொத்த பையே மேற்குறித்த சிறுவர் என சந்தேகிக்கப்படும் மனித எலும்புக்கூட்டுடன் மீட்கப்பட்டது. இந்த நீல நிற பை மீட்கப்பட்டதைத் தொடர்ந்து, சமூக வலைதளங்களில் இந்த விடயம் பெரிய கவனிப்பைப் பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

### கண்ணீரை வரவைத்த பொம்மை

மேற்குறித்த பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நீல நிற பையினுள் என்ன இருக்கும் என்பதைக் கண்டறிந்தால், இந்த மனிதப் புதைகுழி குறித்த புதிய தகவல்கள் கிடைக்கும் எனப் பலரும் எழுதி, ஆர்வமேற்படுத்தினார்கள்.



அதற்கமைவாக அடுத்து வந்த அகழ்வு நாட்களின்போது குறித்த நீல நிற பை ஆராயப்பட்டது. அதனுள் அதிகம் சிறுமிகள் வைத்து விளையாடும் பொம்மை ஒன்று மாத்திரமே இருந்தது. இந்தப் பொம்மை மீட்பு விவகாரம் சிங்கள மக்கள் மத்தியில் கூட கவனிப்பை ஏற்படுத்தியது. செம்மணி மனிதப் புதைகுழி மீதா உணர்வை கொதிநிலையாக்கியது. மீட்கப்பட்ட பொம்மையைப் பார்த்த பலர் கண்ணீர் சிந்தினார்கள். இந்தப் பொம்மையோடு இணைந்த எலும்புக்கூட்டுக்கு அருகில் சிறிய வளையல் ஒன்றும், Bata வகை காலணி ஒன்றும் மீட்கப்பட்டது. இவ்வாறு மீட்கப்பட்ட பொருட்களின் நிழற்படங்களைப் பார்க்கும்போது உணர்வு மேலிடுவது தவிர்க்கமுடியாததாக இருந்தது.

### செயற்கை நுண்ணறிவு மீதான அதிருப்தி

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான அகழ்வுப் பணிகள் ஆரம்பித்த நாள் தொடக்கம், அங்கு மீட்கப்படும் மனித எச்சங்களைக்கொண்டு செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி அந்த நிழற்படங்களை மீளுருவாக்கம் செய்யும் உணர்வாளர்களும் அதிகரித்துள்ளனர். ஆரம்பத்தில் அது சமூக வலைதளங்களில் அதிக கவனிப்பையும், உணர்வையும் ஏற்படுத்தும் விடயமாக இருந்தது. ஆனால் அகழ்வு தொடங்கி இரண்டு வாரங்களை நெருங்க, செயற்கை நுண்ணறிவைக் கொண்டு உருவாக்கப்படும் செம்மணி தொடர்பான போலி படங்கள், செம்மணி அகழ்வு பற்றி உண்மைத்தன்மையை பொய்யாக்கிவிடும் என்ற அபாயம் வெளிப்படுத்தப்பட்டது.

அகழ்வின்போது உண்மையாக எடுக்கப்படும் எலும்புக் கூட்டுப் படங்கள் தாராளமாகக் கிடைக்க, அதைவிடுத்து, படு கொலைசெய்யப்பட்ட கிருசாந்தியின் படத்தைக்கூட செயற்கை நுண்ணறிவால் உருவாக்கி பரவவிட்டன. தற்போது அது உணர்வைத் தரும் விடயமாக இருப்பினும், எதிர்காலத்தில் விடயம் அறியாத தலைமுறையினருக்குப் பொய்யான தரவுகள் சென்றடைய வாய்ப்பேற்படுத்தி விடும் என்கிற சிந்தனையின் அடிப்படை யில், செம்மணி பற்றிய படங்களை செயற்கை நுண்ணறிவு கொண்டு உருவாக்கி சமூக வலைதளங்களில் பரப்புவது அகழ்வாய்வுக்குழுவினால் தடைசெய்யப்பட்டது. மீறியும் அதனைச் செய்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஊடக அறிவிப்பு செய்யப்பட்டது.

### அகழ்வுக்குழிகளில் காணப்படும் போதாமைகள்

செம்மணி அகழ்வுக்குழியில் பல போதாமைகள் காணப்படு வதாக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் ஊடகச் சந்திப்பொன்றில் வைத்து தெரிவித்திருந்தார்.



காலநிலை மாற்றம் அடிக்கடி நிகழ்வதனால் மழை பெய்தால் செம்மணி அகழ்வுக்குழிகள் பாதிப்படையும். அதனால் அகழ் வினைத் தொடர்ந்தும் மேற்கொள்ளமுடியாதுபோகலாம் எனவும், அதனைப் பாதுகாக்கவல்ல கொட்டகைகள் அமைக்கப்படவில்லை எனவும், இன்னமும் செம்மணி அகழ்வுப் பகுதியில் சிசிரிவி கெமராக்கள் பொருத்தப்படவில்லை எனவும், செம்மணி அகழ்வுக் குழிப் பகுதியில் ஊடகவியலாளர்கள் செய்தி சேகரிப்பதற்கு மிகச்சொற்பளவிலான நேரமே வழங்கப்படுகின்றது எனவும் கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், அரசாங்கம் இந்த அகழ்வை விருப்போடு மேற்கொள்ளவில்லை எனவும் கருத்துவெளியிட்டிருந்தார்.

இதனை ஏற்காத அகழ்வாய்வுக் குழுவினர், அகழ்வுக் குழி பகுதியில் பாரிய கொட்டகைகள் அமைத்தால் அது அகழ்வி னைப் பாதிக்கும் எனவும், அதனால் சிறியளவிலான தற்காலிக



கூடாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன எனவும், சிசிரிவி கெமரா அகழ்வுக்குழி பகுதியில் பொருத்தப்பட்டுள்ளது எனவும், மழை வந்தால் உடனடியாகவே அகழ்வுக்குழிகளைப் பாதுகாப்பதற்கான பொறிமுறைகள் தம்மிடம் உண்டு எனவும், கடந்த வாரத்திற்கு முந்தைய வாரம் ஊடகவியலாளர்கள் எடுத்த சில படங்களை வைத்து சமூக வலைதள வாசிகள் அகழ்வாளர்கள் அகழ்வுவேளையில் சிரிக்கின்றனர் என முன்வைத்த விமர்சனங்களை அடுத்தே ஊடகவியலாளர்களுக்கான நேரம் மட்டுப்படுத்தப்பட்டது எனவும் தெரிவித்திருந்தனர்.

தாம் நாளொன்றுக்கு பத்து மணிநேரத்திற்கும் மேலாகத் தொடர் அகழ்வில் ஈடுபடுகின்ற போதிலும், இவ்விதம் முன்வைக்கப்படுகின்ற விமர்சனங்கள் தமது மனங்களை வேதனைப்படுத்துகின்றன எனவும் குறிப்பிட்டிருந்தனர்.

### ஊடக நேர்காணல்களில் முன்வைக்கப்படும் சந்தேகங்கள்

செம்மணி மனிதப் புதைகுழி பற்றி யாழ்ப்பாணத்தை சேர்ந்த பலரும் ஊடகங்களிலும், பொதுவெளியிலும் கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர். இவ்வாறு கருத்துவெளியிடுபவர்கள் செம்மணியில் மீட்கப்படும் மனித எலும்புக்கூடுகள் யாரினுடைய தாக இருக்கலாம் என்கிற சந்தேகத்தை வெளிப்படுத்திவருகின்றனர்.

2009ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதிப்போர் வேளையில் இராணுவத்திடம் சரணடைந்தவர்களில் ஒரு தொகுதியினராக இந்த எலும்புக்கூடுகள் இருக்கலாம் என ஒரு சாராரும், 1996, 1997 ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தில் வைத்து இராணுவம் கடத்தி காணாமலாக்கியவர்களின் எலும்புக்கூடுகளாக இவை இருக்கலாம் என இன்னொரு சாராரும், அவ்வாறு கடத்தி காணாம லாக்கியவர்களை செம்மணி வெளியில் கொன்று புதைத்த விவகாரம் நீதிமன்றத்திற்குத் தெரியப்படுத்தப்பட்ட பின்னர், இரவு வேளைகளில் அவசர அவசரமாக அந்தப் புதைகுழிகள் திறக்கப் பட்டு, அங்கிருந்த அத்தனை எலும்புக்கூடுகளும் அள்ளியெடுக் கப்பட்டு, மயானப்பகுதியில் மீளப் புதைக்கப்பட்டிருக்கலாம் என மற்றொரு சாராரும், இராணுவம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய பின்னர் பூநகரியிலிருந்து கொழும்புத்துறைக்குப் படகில் வந்தவர்களே கொன்று புதைக்கப்பட்டுள்ளனர் என இன்னொரு சாராரும் கருத்துவெளியிட்டுள்ளனர்.

இதற்கிடையில் தெற்கில் விமல் வீரவன்ச உள்ளிட்ட கடும்போக்கு வாதிகள் செம்மணியில் கொன்று புதைக்கப்பட்டவர்கள் இராணு வத்தினரே எனவும் கூறிவருகின்றனர். கொன்று புதைக்கப் பட்டவர்கள் இராணுவத்தினர்தான் எனில், இலங்கை இராணுவத் தில் சிறுவர்களும் இணைக்கப்பட்டிருந்தனரா என்கிற தர்க்கமிகு கேள்விகளும் சமூக வலைதளங்களில் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

### சிங்களவர்களின் மனநிலை என்ன?

செம்மணி மனிதப்புதைகுழி அகழ்வு விவகாரம் தெற்கு ஊடகங்களின் கவனிப்பையும் ஈர்த்திருக்கின்றது. சமூக ஊடகங்களில் செம்மணி அகழ்வில் மீட்கப்படும் எலும்புக்கூடுகள் பற்றிய படங்கள் பகிரப்படும்போது, மிக மோசமான இனவாதத்தை சிங்கள மக்களில் பெருவாரியானவர்கள் வெளியிட்டு வருகின்றனர். இந்த எலும்புக்கூடுகள் தமிழீழ விடுதலைப் புலிகள் கொலை செய்து புதைத்தவர்களினுடையது எனவும், விடுதலைப் புலிகள் சிங்கள மக்களுக்கு எதிராக மேற்கொண்ட படுகொலைகளுக்கு செம்மணி மனிதப் புதைகுழி பதிலாக அமையும் எனவும் கருத்திடுகின்ற னர்.

இதேவேளை மனச்சாட்சியுடன் சிந்திக்கத் தலைப்படுகின்ற சிங்கள மக்கள் செம்மணியில் மீட்கப்படும் மனித எலும்புக்கூடுகளை அவதானித்து, தம்மிடம் காட்டப்பட்டுள்ள போர் வெற்றியானது பாரிய மனிதப் புதைகுழியின் மேலேயே அமைக்கப்பட்டுள்ளது எனவும், போரில் சிறுவர்களைக்கூட கண்மூடித்தனமாகக் கொன்று புதைத்துள்ளனர் எனவும் கருத்திட்டு வருகின்றனர்.

### மனிதப் புதைகுழியா? புதைகுழிகளின் வெளியா?

இவ்வாறு பல்வேறு மட்டங்களிலும் அதிர்வலைகளையும், அவதானிப்புக்களையும் பெற்றுள்ள செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வானது தமிழர்கள் மத்தியில் கடுஞ்சினத்தையும், கவலையையும் ஏற்படுத்தியுள்ளது. அதற்காக குமுறல்களைப் போராட்டங்களாக, சமூக வலைதளப் பதிவுகளாக வெளிப்படுத்தி யும் வருகின்றனர்.

இதேவேளை இந்த செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுகள் மன்னார் சதொச மனிதப் புதைகுழி அகழ்வு போலவோ அல்லது கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுபோலவோ முடிந்துவிடக்கூடாது எனவும், முழுமையாக அகழப்பட்டு உண்மை வெளிப்படுத்தப்படல் வேண்டும் என்பதையும் வலியுறுத்தி வருகின்றனர்.

செம்மணி மனிதப் புதைகுழி என்பது ஓரிடத்தை மாத்திரம் மையப்படுத்தியதல்ல. மாறாக செம்மணி வெளி முழுவதுமே மனிதப் புதைகுழிகள் இருக்கலாம் என்கிற சந்தேகம் நாளுக்கு நாள் வலுப்பட்டே வருகின்றது. இந்நிலையில் செம்மணி மனிதப் புதைகுழி என அதனை வரையறுப்பதை விட, செம்மணி மனிதப்புதைகுழிகளின் வெளி என அடையாளப்படுத்து வதே பொருத்தமானது என்கிற வாதங்களும் யாழ்ப்பா ணத்தை சேர்ந்த புத்தசீவிகளிடத்தே நிலவிவருகின்றமை குறிப் பிடத்தக்கது.

■

# Souls That Split the Earth in Search of Justice

By Jera

The grave in Chemmani is far from silent. Even before the controversy stirred by the mass grave in Kokkuthoduvai, Mullaitivu, could cool, the soil of Chemmani has begun revealing its own disturbing secrets. The daily excavations at this site, located in northern Sri Lanka, continue to unearth more human remains—keeping the country's conscience raw and exposed.

For those who declared that Sri Lanka had moved past its war-torn history—that peace had returned, that Tamil minds were ready to reconcile with the South, and that the National People's Power coalition had brought about a just government—Chemmani offers a chilling rebuttal. The spirits of the dead—those who were tortured and hastily buried by the Sri Lankan military—refuse to rest. They resist the state's attempt to repackage history, tear through the manufactured image of post-war reconciliation, and confront the nation with the buried truths it refuses to face. These souls, clawing their way through layers of earth, challenge the illusion of normalcy.

They cast doubt on the so-called stability, strip away the performative democracy, and unsettle the convenient narratives that have long obscured Sri Lanka's war crimes. Even among the Sinhalese with conscience, the myth of military victory is beginning to tremble.

### Excavation Exposes Fear and Grief

As of the writing of this report, 65 skeletal remains have been unearthed at Chemmani. Among these, at least 15 are suspected to belong to children. Based on bone size and structure, investigators believe these could be juvenile remains. With the second phase of excavation scheduled to resume soon for another 45 days, there is growing anticipation—and dread—that Chemmani may be home to one of the largest mass graves in the island's history.

Last week, fears intensified when it was suggested that, at this pace, clusters of human remains could emerge from different sections of Chemmani.

### A Blue Schoolbag—and a Haunting Discovery

Until last week, no personal items had been recovered—only bones, stripped of identifying features or visible signs of violence. Forensic experts had voiced concern that determining cause of death might be nearly impossible. Then, a turning point: excavators found a bright blue schoolbag next to the suspected remains of a child.



During the war, UNICEF had distributed blue schoolbags to children in the North and East. The bag recovered from Chemmani matches the exact shade of those war-era kits. The discovery captured widespread attention on social media and reignited public grief.

Inside the bag was a doll—a toy commonly played with by little girls. The image of that doll, found next to tiny bangles and a child's sandal, moved many to tears, including members of the Sinhalese community. These simple belongings, long buried, broke open a flood of sorrow.

### AI Grief, Fake Images, and a Warning

Since the beginning of the excavation, some users have used AI to reconstruct faces and scenes from the Chemmani remains. Initially, these reconstructions evoked strong emotions online. But as the weeks passed, so too did the concern: fabricated images began circulating that bore little resemblance to reality.

Even a widely shared AI-generated image of Krishanthy—a known victim of state violence—began to muddy the line between fact and fiction. In response, the excavation team banned the creation and sharing of AI-generated images tied to Chemmani. They warned that legal action would be taken against violators, citing the risk of future generations receiving manipulated history as truth.

### Logistical Lapses and Government Indifference

Local MP Shanakiyan Rasamanickam has criticised the excavation's infrastructure, highlighting that the site lacks protective shelters despite unpredictable weather, and has not yet been equipped with CCTV for proper monitoring. He added that journalists are only allowed limited time on site and suggested the government is not committed to seeing this investigation through.

The excavation team countered these claims, saying large tents would interfere with digging, and that CCTV had already been installed. They blamed social media backlash—particularly criticism about volunteers smiling during the dig—for new restrictions on press access. Volunteers expressed distress, saying that despite spending over 10 hours daily in emotionally draining work, they were vilified online.

### Whose Bones Lie Beneath?

Residents and activists from Jaffna have raised numerous questions: Whose remains lie beneath Chemmani?Some believe they belong to Tamils who surrendered to the military during the final days of the war in 2009. Others suspect the bones could be those of civilians abducted by the military during the late 1990s. One theory posits that previously identified graves near Chemmani were hurriedly reopened and the remains relocated once court inquiries began. Another suggests that civilians fleeing by boat from Poonakary to Colombo during the war may have been intercepted and executed here.

Meanwhile, far-right Sinhala politicians like Wimal Weerawansa claim the bodies are those of slain soldiers—raising disturbing questions. If soldiers are buried here, does that mean children served in the military?

### Reactions in the South: A Divided Conscience

Photos of Chemmani's excavations have reached the southern Sinhala media, provoking a range of reactions. Many respond with outright denial, asserting that the remains belong to victims of the Tamil Tigers. Some insist Chemmani is simply a propaganda tool against the military.

Yet, among more introspective Sinhalese, the images evoke something else: shame. For them, the myth of military victory now rests atop mass graves filled with women, men, and children—many of them executed with cold precision. They are beginning to reckon with the reality that even children were not spared.

### A Mass Grave or a Graveyard of Graves?

In Tamil circles, the Chemmani site has triggered a wave of outrage and grief. Protesters and social media users are demanding full accountability. Many stress that Chemmani must not become another Mannar or Kokkuthoduvai—a partially excavated, soon-forgotten footnote in a long history of impunity.

This is not just one site, they argue. The land surrounding Chemmani may itself be one vast cemetery. Increasingly, Buddhist monks in Jaffna and northern Tamil leaders alike insist that it's more accurate to speak not of the Chemmani grave, but of the Chemmani field of mass graveyard.

■

● ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி




# அன்பாலே அழகாகும் வீடு!

வாழ்க்கை அழகானது. சிதையும் ஏதோ ஒரு கனவு வாழ்வின் சமநிலையை குழைத்தாலும், வேறொரு கனவை சாத்தியப்படுத்துவதன் மூலம், வாழ்க்கை தன்னைத் தானே சமன் செய்துக் கொள்கிறது. - அரவிந்த் சச்சினானந்தன்

ஆஸ்திரேலியாவின் முதன்மையான பிரச்சினை என்னவென்று யாரிடம் கேட்டாலும் உடனே பதில் கிடைத்துவிடும். குடியிருப்பு வசதி பற்றாக்குறை. அதிகரித்து வரும் பணவீக்கத்தினால் விலைவாசி உயர்வு, அதன் பலனாக வீட்டு வாடகை உயர்வு.சராசரி ஆஸ்திரேலிய குடிமகனின் கனவு சொந்த வீட்டில் குடியேறுவது தான். ஒருகாலத்தில் ஏறக்குறைய எல்லோராலும் வீடு வாங்க முடியும் என்ற நிலை மாறி ,வீடு வைத்திருப்பதே ஆடம்பரம் என்ற நிலைக்கு கொஞ்சம் கொஞ்சமாக நகர்ந்து கொண்டிருக்கிறோம். பேராசை பிடித்த நில உரிமையாளர்கள், வீடுகளை விற்கும் இடைத்தரகர்கள் ,அரசாங்கத்தின் முட்டாள்தனமான அணுகுமுறைகள் எல்லாம் சேர்ந்து வீடு என்பது பெருங்கனவாக பெரும்பான்மையோருக்கு ஆகிவிட்டது. இந்த நேரத்தில் நமது சிக்கல்களை மிக நுண்ணியமாக படம்பிடித்திருக்கிறது "3டீஉமு" திரைப்படம்.

"வாடகை கொடுக்க வக்கில்லை. உங்களுக்கெல்லாம் ரேடியோ ஒரு கேடா",

"தேர்வுக்காக படிக்கும் நேரத்தில் கதவை தட்டி மின்விளக்கை அணைக்கவும் - கரண்ட் பில் யார் கட்டுவா " மற்றும் இன்ன பிற கொடுஞ்சொற்களை வீட்டு உரிமையாளர்களிடம் வாங்கி மனம் வெதும்பியிருக்கிறீர்களா ? வெள்ளத்தில் வாடகைக்கு குடி இருந்த வீடு மூழ்கி மாடி வீடு வைத்திருக்கும் வீட்டு உரிமையாளர் முன்னே கூனிக்குறுகி நின்றிருக்கிறீர்களா ?

ஆம் என்றால் உங்களுக்கு இந்த படம் பிடிக்கும். இல்லையென்றாலும் இந்த படத்தை பாருங்கள். உங்களுக்கு அந்த அனுபவம் என்னவென்று விளங்கும்.

படத்தின் பெயரிலேயே படத்தின் மொத்த கதையையும் சொல்ல முடிந்த படங்களின் எண்ணிக்கை மிகக்குறைவு தான் இல்லையா? ஆதலால் இயக்குனர் படத்தின் கதையை விளக்க ரொம்ப மெனக்கெடாமல் முதல் காட்சியிலிருந்தே நமக்கு கதாபாத்திரங்கள் அறிமுகம் ,அவர்கள் குணாதிசயங்கள் என்று எளிதில் நமக்கு கடத்த முடிகிறது. எல்லா சராசரி கீழ் நடுத்தர வர்க்க குடும்பங்களைப் போல இந்த படத்திலும் ஒரு குடும்பம், அவர்களின் பல கவலைகள் அதில் தலையாய பிரச்சினை சொந்த வீடு இல்லை என்பது தான். ஒவ்வொரு வாடகை வீட்டிலும் ஒவ்வொரு பிரச்சினை வருகிறது.

ஒவ்வொரு பிரச்சினை வரும்போது அவர்கள் நகரத்தை விட்டு இன்னும் தொலைவில் நகர்ந்து கொண்டேயிருக்கிறார்கள். இங்கே தங்கள் மூத்த மகனை ( சித்தார்த் ) ஒரு தனியார் பள்ளிக்கூடத்தில் ,அவர்கள் மகளை (மீதா ரெங்கநாத்) ஒரு அரசுப்பள்ளியிலும் படிக்கவைக்கின்றனர் . இந்த படம் முழுவதிலும் சித்தார்த் மிக இயல்பாக பொருந்துகிறார். தன்னுடைய ஆசைகளை தனக்குள்ளே ஒளித்து வைத்துக்கொண்டு, தனது தந்தை சொல்வதை கேட்டு நடப்பதிலாகட்டும், ஒவ்வொரு முறை வீடு வாங்க முடிவெடுக்கும் போதும் ஆசை நிறைவேறாகாமல் போகும் போது தவிப்பதாலாகட்டும் என்று படம் முழுவதும் நடிப்பில் மிளிர்கிறார்.

கற்றது தமிழ் படத்திற்கு பிறகு நான் ரசித்த காதல் திரைப்படம் இந்த படம் தான். அவ்வளவு அழகாகவும், இயல்பாகவும் வந்திருக்கிறது.



சித்தார்த்தின் காதலி படத்தில் இரண்டே முறை அவரது கைகளை பிடித்து ஆறுதல் சொல்லுவார். அப்பொழுது அவரின் கண்கள் மின்னும், சித்தார்த் தனது கவலைகளை எல்லாம் மறந்து போவார். Drink hot water . Burn your lips . Remember the people who remembers you எல்லா தமிழ்ப்படங்களில் வரும் கதாநாயகன் போல் ஒரே பாடலில் பணக்காரர் ஆவதில்லை. ஒவ்வொரு முறையும் வாழ்க்கை புறக்கணித்து கொண்டே இருக்கிறது. ஒவ்வொரு தோல்வியிலும் துவண்டு விடாமல் மற்றோரு முறையும் எழுத்து போராடிக்கொண்டே இருக்கிறார்கள். இவ்வளவு பிரச்சினைகளுக்கு நடுவிலேயும் ஒரு மனிதன் வாழமுடியுமானால் , அதற்குப் பின்னே குடும்பம் என்கிற அமைப்பு அவனைத் தாங்கிக்கொள்வதை வெகு அழகாக எடுத்திருக்கிறார்கள். இங்கே சித்தார்த், சரத்குமார் ஆகியோரின் ஒவ்வொரு தோல்விக்கு பின்னே குடும்பம் அரவணைத்துக்கொள்கிறது. தங்களது லட்சியமான வீடு வாங்கும் முடிவை ஒவ்வொரு முறையும் ,குடும்பத்திற்காக தியாகம் செய்துகொண்டேயிருக்கிறார்கள். நெகிழ்ச்சி.

ஒவ்வொரு தந்தையும் தனது குழந்தை தன்னைப்போல் ஆகிவிடக் கூடாது , அதாவது தன்னைப் போல தோற்றுவிடக்கூடாது என்பது தான் குறிக்கோள்.இங்கேயும் படம் முழுவதிலும் தனது தோல்விகளை தனது குழந்தைகள் மேல் ஏற்றாமல் கடைசிவரை தனது குழந்தைகளுக்காக தியாக வாழ்க்கை வாழ்கின்றனர் சரத்குமாரும் , தேவயானியும். படத்தில் எனக்கு பிடித்த இன்னொரு விஷயம் கொடுமைக்கார கணவர் குடும்பத்திலிருந்து தனது மகள் வெளியேறியபோதிலும் அந்த முடிவுக்கு குடும்பமே துணை நிற்கிறது. இந்த இடத்தில் தற்கொலை செய்து இறந்துபோன ரிதன்யாவின் குடும்பத்தை நினைத்துப் பார்க்கிறேன். ஒருவேளை இந்தப் படத்தை பார்த்திருந்தால் அந்த முடிவினை எடுத்திருக்க மாட்டார் என்றே நினைக்கிறேன்.

"கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக்கப்பா, உன் எதிர்காலம் நல்ல பிரகாசமாக இருக்கும்"- என்று ஒவ்வொரு முறை சொல்லும்போதும் ஒரு மகனாக சித்தார்த் கடைசிவரை தனக்கு பிடிக்காத விஷயத்தை தந்தைக்காக செய்யும் மகனாக சிறந்த நடிப்பினை வழங்கியிருக்கிறார். பாடல்கள் எதுவும் வலிந்து புகுத்தாமல் இயல்பாக வருவது நல்ல முயற்சி. வெகு காலத்திற்கு பிறகு குத்துப்பாட்டு, சண்டை இல்லாத யதார்த்த சினிமா பார்க்கும்பொழுது நாம் எங்கே தமிழ்ப்படம் பார்க்கிறோமோ இல்லை மலையாளப் படமா என்ற சந்தேகம் வருவது இயல்பு. என்ன படத்தில் குறைகளே இல்லையா என்று கேட்டால் , ஆம் நிச்சயமாக இருக்கிறது. முதலில் சரத்குமாரின் கதாபாத்திரம் படத்தில் ஒன்றாமல், எல்லா காட்சிகளுக்கும் ஒரே டெம்ப்ளட் முகபாவத்தை வைத்திருந்தாலும், இறுதிக் காட்சிகளில் மிக நன்றாகவே ஒன்றி நடித்திருக்கிறார். ஒவ்வொரு முறையும் வீடு வாங்கும் முயற்சி தோல்வி அடையும்போது, நமக்கே படத்தின் இறுதியில் சிறிது எரிச்சல் வந்தாலும் ,அது தானே நிதர்சனம். அரவிந்த் சச்சினானந்தத்தின் சிறுகதையிலிருந்து இந்தப் படத்தை மிகச்சிறப்பாக இயக்கிய இயக்குனர் ஸ்ரீகணேஷ்-ற்கு பாராட்டுக்கள்.இன்னும் அழுத்தமான நல்ல படங்களை தொடர்ந்து தரவேண்டும்.

வீடு என்ன நான்கு சுவர்களால் ஆன கட்டிடமா ? இல்லை , மரியாதை.

# மோடி, நெத்தன்யாகுவை கைது செய்வேன்!

## நியூயோர்க் மேயர் வேட்பாளராக ஜோஹ்ரான் மம்தானி!!

•ஐங்கரன் விக்கினேஸ்வரா

இந்திய- அமெரிக்கரான ஜோஹ்ரான் மம்தானி நியூயோர்க் நகர மேயர் பதவியின் ஜனநாயகக் கட்சி வேட்பாளராக உறுதி செய்யப்பட்டுள்ளார்.

ஜோஹ்ரான் மம்தானி, நியூயோர்க் மாநில சட்டமன்ற உறுப்பினராகவும், ஜனநாயக சோசலிச வாதியாகவும் திகழும் நிலையில், நியூயோர்க் நகர மேயர் பதவிக்கான ஜனநாயகக் கட்சியின் முதன்மைத் தேர்தலில் தனது வெற்றியை அறிவித்துள்ளார்.

**நியூயோர்க் மேயர் வேட்பாளர்:**

33 வயது இளைஞன் ஜோஹ்ரான் மம்தானி (Zohran Mamdani) தன்னை ஜனநாயக சோசலிசவாதி என வெளிப்படையாக கூறி வருபவர். இவரிடம் தோல்வியுற்ற முன்னாள் கவனர் கோமோவும் தற்போதைய மேயர் எரிக்கும் சுயேச்சையாக போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளனர்.

நியூயோர்க் மேயருக்கான தேர்தல் நவம்பர் 4ம் திகதியே இடம்பெற உள்ளது. மம்தானிக்கு எதிராக இதுவரை பெருமளவு பணம் 30 மில்லியன் டொலர்கள் வரை செலவிடப் பட்டுள்ளது.

அமெரிக்காவில் அவரை வீழ்த்துவதற்கான எல்லா வியூகங்களுக்கும் பணத்தை வாரி வழங்க பெரும் தலைவர்கள் தயார் நிலையில் உள்ளனர்.

ஆனாலும் 50,000இற்கு மேற்பட்ட தொண்டர்கள் இவரின் முதலாவது வெற்றிக்காக பங்காற்றியிருந்தார்கள். 20,000 மேற்பட்ட மக்கள் இவருக்கு நிதியுதவி அளித்துள்ளார்கள். இதன் மூலம் 18மில்லியன் டொலர் சேகரிக்கப்பட்டது. ஒரு கட்டத்தில் தனக்கு பணம் வேண்டாம், தொண்டர்கள் மட்டுமே வேண்டும் என்று அவர் அறிவிப்பு விடுத்தார்.

இவர் திரைப்பட இயக்குனர் - தயாரிப்பாளர் மீரா நாயரின் மகனாவார். இவரது தற்போதைய வெற்றியே அமெரிக்காவில் பரபரப்பாக பேசப்படுகின்றது.

**முஸ்லிம் மதத்தை சேர்ந்த ஜோஹ்ரான்**

அமெரிக்காவின் நியூயோர்க் மாநகர ஜனநாயகக் கட்சியின் மேயர் பதவி வாக்கெடுப்பில் 56 சதவீத வாக்குகளைப் பெற்று அதிகாரப் பூர்வமாக வெற்றி பெற்றுள்ளார். முதல்முறையாக முஸ்லிம் மேயராக ஜோஹ்ரான் மம்தானி தேர்வு செய்யப்பட்டால், அவர் பல எதிர்ப்புகளை தாண்டிய வரலாற்று வெற்றியை பெறுவார்.

முற்போக்கான ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த அவருக்கு எதிராக பெரும் நிதியுதவியுடன் கூடிய ஜி -இஸ்ட் பிரச்சாரம் இருந்த போதிலும், ஐந்து பெருநகரங்களிலும் கிட்டத்தட்ட ஒரு மில்லியன் யூத குடியிருப்பாளர்கள் இருந்தபோதிலும், அவரைப் பதவி நீக்கம் செய்வதற்கான முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்தன.

**யார் இந்த ஜோஹ்ரான் மம்தானி?**

உகண்டாவின் கம்பாலாவில் 1991 ஆம் ஆண்டு பிறந்தவர் ஜோஹ்ரான் மம்தானி. சலாம் பாம்பே, மான்சூன் வெட்டிங் போன்ற பிரபல திரைப்படங்களை இயக்கிய மிரா நாயர் இவரது தாயார் ஆவார். தந்தை கல்வியாளர் மஹ்மூத் மம்தானி. தென்னாப்பிரிக்காவின் கேப் டவுனில் குழந்தை பருவத்தை கழித்த ஜோஹ்ரான் ஏழு வயதில் நியூயோர்க் நகரில் பெற்றோருடன் குடிபெயர்ந்தார்.

போடோயின் கல்லூரியின் இளங்கலைப் பட்டப்படிப்பு பயிலும்போதே ஜோஹ்ரானின் அரசியல் வாழ்க்கை தொடங்கியது. பாலஸ்தீன நீதிக்கான மாணவர்கள் என்ற அமைப்பை நிறுவினார்.

அஸ்டோரியா மற்றும் லாங் தீவு உள்ளிட்ட நகரங்களை உள்ளடக்கிய 36-வது மாவட்டத்தின் பிரதிநிதியாக நியூ யார்க் மாகாண அவைக்கு 2019 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப் பட்டார்.


சிரியா நாட்டின் கலைஞர் ராமா துவாஜி என்பவரை இந்தாண்டு தொடக்கத்தில் ஜோஹ்ரான் திருமணம் செய்துகொண்டார்.

மலிவு விலை வீடுகள், பொது போக்குவரத்து மற்றும் புலம்பெயர்ந்தோர் உரிமைகள் ஆகியவற்றை தொடர்பாக தொடர்ந்து பிரசாரம் மேற்கொண்டு வருகிறார்.

தனது முற்போக்கு கருத்துகளால் நியூயோர்க் இளைஞர்கள், இடதுசாரி கருத்துடையவர்கள் மத்தியில் ஜோஹ்ரானுக்கு அதிக வரவேற்பு கிடைத்துள்ளது. அவர் நியூயோர்க் மேயராக ஜோஹ்ரான் தேர்வாக அதிக வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

நியூயோர்க் மேயராக அவர் தேர்வானால், முதல் முஸ்லிம் மற்றும் இந்திய - அமெரிக்க மேயர் என்ற வரலாறு உருவாகும்.

> நியூயோர்க் மாநகர ஜனநாயகக் கட்சியின் மேயர் பதவி வாக்கெடுப்பில் 56 சதவீத வாக்குகளைப்பெற்று அதிகாரப்பூர்வமாக வெற்றி பெற்றுள்ளதுடன், முதல் முறையாக முஸ்லிம் மேயராக ஜோஹ்ரான் மம்தானி தேர்வு செய்யப்பட்டால், அவர் பல எதிர்ப்புகளை தாண்டிய வரலாற்றுப் வெற்றியை பெறுவார்.



**மோடி ஒரு போர்க் குற்றவாளி:**

நரேந்திர மோடி முதல் இஸ்ரேல் வரை, ஜோஹ்ரான் மம்தானி பலரை வெளிப்படையாக விமர்சனம் செய்துள்ளார். கடந்த மாதம், இந்திய பிரதமர் நரேந்திர மோடி மேடிசன் சதுக்கத் தோட்டத்தில் ஒரு கூட்டத்தை நடத்தினால், அதன் பிறகு ஒரு கூட்டு பத்திரிக்கையாளர்கள் சந்திப்பை நடத்தினால் அதில் நீங்கள் பங்கேற்பீர்களா என்ற கேள்வி மம்தானியிடம் முன்வைக்கப்பட்டது.

"என் அப்பாவும் அவரது குடும்பத்தினரும் குஜராத்தை பூர்வீகமாகக் கொண்டவர்கள். குஜராத்தின் முஸ்லிம்களை கொத்துக் கொத்தாகக் கொல்ல மோடி உதவினார். அங்கே அளவுக்கு அதிகமான வன்முறை நிலவியது. தற்போது குஜராத்தில் இஸ்லாமியர்களே இல்லை என்பது போன்ற ஒரு தோற்றம் நிலவுகிறது.

நாம் பெஞ்சமின் நெதன்யாகுவை பார்ப்பதைப் போன்றே, மோடியையும் பார்க்க வேண்டும். அவர் ஒரு போர்க் குற்றவாளி." - என்று மம்தானி பதில் அளித்தார்.

நியூயொர்க்கில், அவரது இந்த அறிக்கைக்குப் பிறகு சில இந்திய - அமெரிக்கர்கள், இந்துத்துவா குழுக்கள் அவரது கருத்தை வெறுப்பு கொண்ட, பிரிவினையை ஏற்படுத்தும் கருத்து என்று விமர்சித்தனர். மம்தானி மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தனர்.

**நெத்தின்யாகு வந்தால் கைது:**

நியூயோர்க்குக்கு இஸ்ரேலிய பிரதமர் நெத்தின்யாகு வந்தால் கைது செய்வேன் எனவும் சூளுரைத்துள்ளார். அது மட்டுமல்ல இந்திய பிரதமர் மோடியை தனது நகரம் வரவேற்காது. குஜாராத்தில் இஸ்லாமியர்கள் படுகொலைக்கு மோடியே காரணம் எனவும் காரசாரமாக விமர்சித்துள்ளார்.

ஜோஹ்ரான் சியோனிசவாதிகள் மீது காட்டமான விமர்சனம் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது நியாயத்தை கதைத்தால் வாக்கு கிடையாது என்று ஒதுங்கும் அரசியல் தலைமைகள் தங்கள் ஒவ்வாமையை வெளிக்காட்டத் தொடங்கிவிட்டார்கள். அமெரிக்காவின் அதிகாரத்துவ கோட்டைக்குள்ளேயே சிறு புரட்சி நடக்கிறது என்றால் மிகையாகாது.

அத்துடன் பாலஸ்தீன விவகாரத்தில் ஜனநாயகக் கட்சியின் பெரும்பான்மை தலைவர்களிடம் இருந்து மாறுபட்ட கருத்தைக் கொண்டிருக்கிறார் மம்தானி. அவர் பாலஸ்தீனத்திற்கு ஆதரவாகவும், இஸ்ரேலை தொடர்ந்து எதிர்த்தும்-விமர்சித்தும் வருகிறார்.

அமெரிக்க தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றில், இஸ்ரேல் ஒரு யூத நாடாக இருப்பதை அவர் எதிர்த்தார். "மதம் மற்றும் இதர கூறுகளின் அடிப்படையில் குடியுரிமை பிரிக்கப்படும் எந்த ஒரு நாட்டையும் நான் ஆதரிக்க மாட்டேன். அனைத்து நாடுகளிலும் சமத்துவம் நிலவ வேண்டும். இதுதான் என் நம்பிக்கை," என்று அவர் கூறியுள்ளார்.

பாலஸ்தீனர்களின் சர்ச்சைக்குரிய "க்ளோபலைஸ் தி இண்டிஃபாதா (Globalise the Intifada)" என்ற முழக்கத்தில் இருந்து அவர் விலகி நிற்கவில்லை. இண்டிஃபதா என்பது இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்கு எதிராக நடைபெற்ற பாலஸ்தீன போராட்டங்களைக் குறிப்பிடும் சொற்றொடர் ஆகும்.

இது தொடர்பாகப் பேசிய அவர் "இந்த முழக்கம் மனித உரிமைகளுக்கான பாலஸ்தீன மக்களுடைய போராட்டத்தின் அடையாளம்" என்றும் கூறியுள்ளார். "இது சமத்துவத்திற்கான குரல். வன்முறைக்கான குரல் இல்லை" என்றும் அவர் கருதுகிறார்.

ஆனால் அவரது கருத்தை விமர்சிக்கும் பலரும், இந்த முழக்கம் சர்வதேச அளவிலான வன்முறைக்கு வழி வகுக்கிறது. இது யூத வாக்காளார்கள் மத்தியில் அச்சத்தைப் பரப்புகிறது என்று குறிப்பிடுகின்றனர்.

**உடை, உணவு, இருப்பிட இலவசப் பேருந்து சேவை:**

மம்தானி உடை, உணவு, இருப்பிடம், இலவசப் பேருந்து சேவை போன்றவற்றை முன்னிருத்தி தனது பிரசாரத்தை நடத்தி வருகிறார். சாமானியர்களின் குரலாக இருக்க விரும்புவதாக பொது மக்களிடம் அவர் தொடர்ந்து வாக்குறுதி கொடுத்துள்ளார்.

இலவசப் பேருந்து சேவை, அனைத்து குழந்தைகளுக்குமான பாதுகாப்பு, நகரசபையால் நடத்தப்படும் கடைகள், மலிவு விலை வீடுகள், இதன் அடிப்படையில் அவர் தேர்தல் வாக்குறுதிகளைத் தயார் செய்து வருகிறார். பிபிசியிடம் பேசும்போது, மம்தானி, இந்த நகரத்தில் நான்கில் ஒருவர் என்ற அளவில் மக்கள் வறுமையில் வாழ்கின்றனர். ஐந்து லட்சம் குழந்தைகள் தினமும் இரவு பசியோடு உறங்குகின்றனர் என்றும் தெரிவித்தார்.

இந்த நகரைச் சிறப்பாக மாற்றும் அடையாளத்தை இந்த நகரம் இழந்து வரும் அபாயத்தில் உள்ளது என்று அவர் எச்சரித்தும் கூறியுள்ளார். அவரது தீவிர பிரசாரத்தின் போது காங்கிரஸ் உறுப்பினர் அலெக்ஸாண்டிரியா ஒகாசியோ - கோர்டெஸ் மற்றும் செனெட்டர் பேர்னி ஸாண்டர்ஸ் ஆகியோர் மட்டுமே ஆதரவளித்து உள்ளனர்.



HavenHill
REAL ESTATE

# Thinking of Selling?

# Sell your home for only

# 1% Commision.

**We get you the best price, without the big commission — only 1%**

Call for a **free**, **no-obligation** market appraisal. **No hidden costs no gimmicks.** We look after **property management** as well.



**Shagi Pathmanathan**
Founder / Director
**0413 076 585**
shagi@havenhillrealestate.com.au
Level 10, 14 Mason St, Dandenong VIC 3175

**Yasantha De Silva**
Founder / Director
**0432 805 336**
yasantha@havenhillrealestate.com.au
Level 10, 14 Mason St, Dandenong VIC 3175

Terms and Conditions apply*

எதிரொலி
ஆஸ்திரேலியா ETHIROLI





# இப்ராகிம் தராரே மேற்குலகின் சிம்ம சொப்பனம்! ஆபிரிக்காவில் புதிய இளம் தலைமை!

•ஐங்கரன் விக்கினேஸ்வரா

பிரெஞ்சு அரசு தனது சொந்த நலனுக்காக ஆபிரிக்காவில் அதிகார வர்க்கங்களின் போட்டிகளைக் கையாள்வதில் நீண்ட கால சாதனையைக் கொண்டுள்ளது. அத்துடன் பாரிஸ் அதன் முன்னாள் ஆபிரிக்க காலனித்துவ சாம்ராஜ்யத்தில் எண்ணற்ற இராணுவச் சதிகளையும் ஏற்படுத்தி வெற்றி கண்டுள்ளது.

**நீண்ட காலமாகவே துயரத்தையே சுவாசித்துக் கொண்டிருக்கும் ஆபிரிக்க குடும்பங்களில் புதிய காற்று வீசுகிறது. ஒட்டு மொத்த ஆபிரிக்காவுக்கும் புதுச் சுவாசம் பெற வேண்டிய ஒரு கட்டாயம் ஏற்பட்டு உள்ளது. உலகில் உள்ள ஏழை நாடுகளிலும் அரசியல் மாற்றம் சாத்தியம் என்பதற்கு இப்ராகிம் தராரே என்ற இளம் வீரரின் வருகை விடிவெள்ளியாக மிளிர்கிறது.**

### தராரே என்ற புரட்சியாளன்:

இன்று மேற்குலகத்தைக் கலங்கடித்து, மேற்குலக ஆதிக்கத்திலிருந்து முழு ஆபிரிக்காவையும் மீட்டெடுப்போம் என்று சபதமிட்டு அதற்காகத் துரிதமாகக் காய்களை நகர்த்திக் கொண்டிருக்கிறார் இப்ராகிம் தராரே என்ற இளம் ஆபிரிக்க வீரர்.

அன்றைய புர்கினா பாசோ (டீரசமiயெ குயளழ) நாட்டின் புரட்சியாளன் தோமஸ் சங்காரா கிளர்ந்தெழுந்தபோது சர்வதேச அதிகாரங்களின் பயங்கரவாதத்தால் அவர் படுகொலை செய்யப்பட்டார். ஆனால் தற்போது அந்த வரலாறு மீள திரும்புகிறது. மூன்று தசாப்தங்கள் கழித்து அந்த மண்ணிலிருந்து இப்ராகிம் தராரே என்ற புரட்சியாளன் வெடித்துக் கிளம்பியிருக்கிறான்.

பாட்ரிஸ் லுமும்பாவில் தொடங்கி சமோரா மோசஸ் மார்சல், தோமஸ் சங்கரா என்று ஆபிரிக்கப் புரட்சியாளர்களின் பட்டியல் நீளமானது. அதில் தற்போது இப்ராகிம் தராரே இணைந்து கொள்கிறார்.

காலனித்துவ காலத்தின் பின்னர் தாம் வெளியேறும்போது தமது கனிமவள சுரண்டலை தொடர்வதற்க்காக ‘ஒரு பொம்மை அரசை’ நிறுவுவது மேற்கு ஐரோப்பியர்களின் வழக்கம். அப்படியான பொம்மை அரசை உதறித் தவிர்த்து சுயாதீன அரசை நிறுவியவர். ஐரோப்பிய - பிரான்ஸ் படை-களை ஆபிரிக்க நாடான புர்கினோ பாசோவை விட்டு வெளியேற்றியவர் இப்ராகிம் தராரே ஆவார்.

### புர்கினா பாசோவின் விடிவெள்ளி:

தற்போது மாலி உட்பட பல ஆபிரிக்க நாடுகளை ஒன்றிணைக்கும் முயற்சியை அவர் முன்னெடுத்து வருகிறார். பலமிக்க ஒன்றிணைந்த ஒற்றுமையான ஆபிரிக்க பொருளாதாரம் மூலமே உலக சாம்ராஜ்ஜியங்களின் சுரண்டலை ஒழிக்கலாம் என்பதை அவர் உணர்ந்துள்ளார்.

அமெரிக்கா, மேற்கு ஐரோப்பிய முதலாளித்துவத்தை நிராகரித்து ஏழை நாடுகள் எப்படி உலகில் அரசியல் செய்ய முடியும், என்ற கேள்விக்கு விடையை அறியத் தந்துள்ளார். அதாவது சமத்துவ தேடலின் விடிவெள்ளியாக, சங்காராவின் அரசியல் வாரிசாக, மேற்கு ஆபிரிக்காவின் இளம் சூரியனாக தோற்றம் பெற்றுள்ளார் இந்த இப்ராகிம் தரோரே ( Ibrahim Traore).

பாரிஸின் காலனித்துவ கொள்கைகளை விமர்சித்துவந்த ஆபிரிக்க ஆட்சிகளை வெளியேற்றுவதற்கு, ஆபிரிக்க நாடுகளில் பல சதிப்புரட்சிகளை பிரான்ஸ் மீண்டும் மீண்டும் பயன்படுத்தியுள்ளது.

1987 இல், புர்கினா பாசோவில், சோவியத் சார்பு ஜனாதிபதி தோமஸ் சங்கராவை தூக்கியெறிந்து, அவரைக் கொலை செய்த பின்னர் பிளைஸ் கம்போரேவை பிரெஞ்சு அரசாங்கம் ஆதரித்தது. ஆபிரிக்காவின் மிக மோசமான அகதிகள் நெருக்கடிகளில் ஒன்றான, புர்கினா பாசோவில் நடந்துவரும் சண்டையால் இரண்டு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். அத்துடன் பல்லாயிரக்கணக்கானோர் பட்டினியின் விளிம்பிற்கும் தள்ளப்பட்டுள்ளனர்.

கடந்த சில ஆண்டுகளாக புர்கினா பாசோ, நைஜர், மாலியில் முன்னாள் காலனித்துவ சக்தியான பிரான்சை தங்கள் நாடுகளில் இருந்து, அதனது படைகளை திரும்பப் பெறுமாறு கேட்டுக் கொண்டன. தற்போது மேற்கு ஆபிரிக்கா முழுவதும் அரசியல் ரீதியாக பிரான்சை எதிர்க்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

ஆயினும் புர்கினா பாசோ, மாலி மற்றும் நைஜர் மீது படையெடுப்பதற்கு தயாராகுமாறு மேற்கு ஆபிரிக்க நாடுகளின் பொருளாதார சமூகம் (ECOWAS) மீது பிரெஞ்சு அழுத்தம் கொடுக்கிறது. 2023 ஒக்ரோபர் மாத தொடக்கத்தில், இந்த மூன்று நாடுகளும் பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை செய்து அதன்மூலம் , சஹேல் அரசுகளின் கூட்டமைப்பை (AES) உருவாக்கிக் கொண்டன.

யுநுளூ நாடுகளில் ஒன்றிற்கு எதிரான படையெடுப்பு முயற்சிக்கு, இந்த மூன்று நாடுகளுக்கும் எதிரான தாக்குதலாகும் என்று கருதி, இந்த மூன்று நாடுகளும் சேர்ந்து பதிலளிப்பார்கள் என்று இந்த ஒப்பந்தம் குறிப்பிடுகிறது.

### புர்கினா பாசோ இராணுவப் புரட்சி:

பிரான்சின் சதிவலையால் 2023 செப்ரெம்பரில் நடந்த சதிப்புரட்சியை முறியடித்ததாக புர்கினா பாசோவின் ஆட்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். செப்ரெம்பர் 2022 இல் புர்கினா பாசோவில் இளம் தலைவர் கப்டன் இப்ராகிம் தரோரே பதவிக்கு வந்த ஒரு வருடத்திற்குப் பிறகு, இந்த தோல்வியுற்ற சதி முயற்சி நடந்துள்ளது.

சுமார் 23 மில்லியன் மக்கள் வசிக்கும் புர்கினா பாசோவில், கடந்த சில ஆண்டுகளாக பல இராணுவப் புரட்சிகளைக் கண்டுள்ளது.

2022 செப்ரெம்பர் பிற்பகுதியில், கப்டன் தரோரே ஆட்சியைக் கைப்பற்றியதில் இருந்து கிளர்ச்சியாளர்களால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை முந்தைய 18 மாதங்களுடன் ஒப்பிடும்போது கிட்டத்தட்ட மூன்று மடங்காக அதிகரித்துள்ளது என்று ஆபிரிக்கா மூலோபாய ஆய்வு மையத்தின் அறிக்கை தெரிவிக்கிறது.

### அடிமைத்தனத்திற்கு எதிராக கிளர்ச்சி:

ஓர் அடிமை, அந்த அடிமைத்தனத்திற்கு எதிராக தான் நடத்தும் கிளர்ச்சி, யாராலும் இரக்கத்துடன் பார்க்கப்படக் கூடாது என்றே விரும்புவான். 2024 இல் ரஷ்யாவிற்கு விஜயம் செய்த போது, “நாங்கள் ஒருபோதும் எங்களுக்காக வருத்தப்படவில்லை. எங்களுக்காக யாரும் வருத்தப்பட வேண்டும் என்று நாங்கள் கேட்கவில்லை” என்ற இப்ராகிம் தரோரின் முழக்கம் செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்கில் மட்டுமல்ல, மேற்கத்திய சக்திகளின் உலகிலும் எதிரொலித்தது.

ஏகாதிபத்தியத்திற்கும் வறுமைக்கும் எதிரான போராட்டத்தை ஒட்டுமொத்த ஆபிரிக்கர்களும் பெரும் எழுச்சியுடன் நடத்த வேண்டிய தருணத்தில் இருக்கிறோம் என்றும் அவர் குறிப்பிட்டார். ஆபிரிக்காவில் மக்களின் அடிமைத்தனத்திற்கு எதிராக தாங்கள் நடத்தும் போராட்டத்திற்கு இதற்கு முன்பும் இப்போதும் பெரும் ஆதரவு அளிக்கிற ரஷ்யாவை நன்றிப் பெருக்குடன் பார்ப்பதாகக் குறிப்பிட்டார்.

மேலும் சவுதி அரசர் தனது நாட்டில் பெரும் எண்ணிக்கையில் மசூதிகளை கட்டித்தருவதாக முன்வந்ததை நிராகரித்து பாடசாலைகளையும் வைத்திய சாலைகளையும் மற்றும் தொழிற்சாலைகளையும் நிர்மாணிக்குமாறு கேட்டவர் இவரே.

மேலும் பல தடவை ஐரோப்பியர்களின் சதித்திட்டத்தினால் திட்டமிட்ட கொலை முயற்சிகளில் இருந்து தப்பியவர். அத்துடன் பிராஸ்சின் கனிமவள கொள்ளையை எதிர்த்து தடை செய்த பெருமைக்கு சொந்தக்காரர் அவரே. ■

# Sai Shree Foods

Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

## REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.

We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin

ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி



# LEFT, RIGHT, LEFT

இந்த செய்தியைப் படிக்கும்போது மனம் கலங்குகிறது. எப்படி இருந்த கட்சி இப்பொழுது ஒன்றிரண்டு தொகுதிகளுக்காக ஊழல் வாதிகளிடம் கையேந்தி நிற்கும் நிலையினை நினைத்தால் நெஞ்சு பொறுக்குதில்லையே.

இந்தியா சுதந்திரம் அடைந்தபோது இரண்டு பெரிய கட்சிகள் காங்கிரஸ் மற்றும் கம்யூனிஸ்ட் மட்டுமே. சுதந்திரத்திற்கு பிறகு நடந்த தேர்தல்களில் 1967 வரை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி திராவிடக்கட்சிகளுடன் சேராமல் தனித்தே போட்டியிட்டு வந்திருக்கிறது. அவ்வாறே செய்திருந்தால் ஒரு மாபெரும் கட்சியாக வந்திருக்க வேண்டியது.

எனது தந்தை சொல்லியிருக்கிறார் "1980 களில் மதுரை என்பது மார்க்சிஸ்ட் கட்சியின் கோட்டை" என்று. ஆனால் என்னவாயிற்று ஒவ்வொரு தேர்தலிலும் காங்கிரஸ் கட்சிக்கு எதிராக போட்டியிடவேண்டுமென்று மாற்றி மாற்றி கழக கட்சிகளுடன் கூட்டணி சேர்ந்து அவர்களுக்காக உழைத்து ஒரு கட்டத்தில் தரைமட்ட நிலைக்கு வந்து (ஊழலும், மதவாதமும் வேண்டாமென்று) விஜயகாந்த் உடன் சமரசம் செய்துகொண்டு அவரையும் முதல்வராக்க முயன்றனர்.

ஊழல் பெரிதா, மதவாதம் பெரிதா என்று ஒவ்வொரு தேர்தலிலும் கேள்வி எழுப்பி மதவாதமே பெரிது என்று சந்தர்ப்பவாத கூட்டணி அமைத்தனர். எனது தந்தையுடன் நான் வாதிடுவேன், "அது எப்படி கோவையின் அருகிலுள்ள வாளையார் எல்லை தாண்டினால் காங்கிரஸ் கட்சி எதிரி, இந்தப் பக்கம் உங்கள் நண்பன், என்ன மாதிரியான சந்தர்ப்பவாத கூட்டணி என்று".

யாராவது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அலுவலகமான பாலன் மாளிகை பார்த்திருக்கிறீர்களா? பாட்டாளிகளுக்காக உழைக்கும் கட்சியின் ஆடம்பரத்தை கண்டு வியக்க வைக்கிறது. கம்யூனிஸ்ட்கள் எங்கே சரிந்தார்கள்? நான் சிறுவயதில் இருந்து என் தந்தையுடன் பல்வேறு நேர்மையான தலைவர்களை பார்த்திருக்கிறேன். வெறும்வயிற்றில் ஒரு தேநீரை மட்டும் அருந்திவிட்டு கட்சிக்காக மணி கணக்காக உழைத்த மாபெரும் மனிதர்களை நான் பார்த்திருக்கிறேன். கட்சிக்காக தான் உழைத்த சம்பாதித்த சொத்துக்களை எல்லாம் எழுதிவைத்துவிட்டு கட்சி தரும் மாதப்படியில் வாழ்ந்த மகத்தான ஆளுமைகளை கண்டு வளர்ந்திருக்கிறேன். பிறகு படிப்படியாக கட்டப்பஞ்சாயத்து செய்தார்கள், பின்னே கந்துவட்டி செய்பவர்கள் ஆனார்கள்.

எனது தந்தையுடன் வாதம் செய்திருக்கிறேன் "ஒரு பாட்டாளி மக்களின் கட்சியின் மாவட்ட செயலாளருக்கு எதற்கு மற்ற கழக செயலாளர்கள் போல் TATA sumo கார் எதற்கு என்று". என் கண் முன்னே கட்சி கரைந்து ஒன்றிரண்டு தொகுதிகளுக்கு பல்வேறு சமரசம் செய்யும் கட்சி ஆகிப் போனது வேதனை தான்.

எது எப்படியிருப்பினும் இன்றும் மக்களின் பிரச்சினைக்காக முதலில் குரல் கொடுப்பவர்கள் அவர்கள் தான். ஒரு சாமானியனுக்கு ஏதாவது பிரச்சினை வந்தால் அவன் முதலில் செல்வது கம்யூனிஸ்ட் அலுவலகத்திற்கு மட்டுமே. அவனுக்கு தெரியும் கம்யூனிஸ்ட்களே ஏழைகளுக்கு என்றும் குரல் கொடுப்பவர்கள்.

அதற்காக நாங்கள் என்றும் எங்கள் கட்சியை கைவிட மாட்டோம். எப்பொழுதும் போல் இந்த வருடம் கட்சிநிதி கேட்டு வந்தால் நாங்கள் கண்டிப்பாக கொடுப்போம். கட்சியுடன் சேர்ந்து தேர்தல் வேளைகளில் பங்கேற்போம்.

ஏனென்றால் ஓங்கி உயர்ந்து பட்டொளி வீசிப் பறக்கும் அந்த செங்கொடிக்கு பின்னே மகத்தான மனிதர்களின் அளப்பரிய தியாகம் இருக்கிறது. லால் சலாம்.

# 1600 கோடி கடவுச்சொற்கள்




Hacking வரலாற்றிலேயே இவ்வளவு பெரிய அளவிலாலான பாஸ்வேர்ட்கள் வெளியானது கிடையாது. இப்போது வெளியான தகவல்கள் படி Google, Apple மற்றும் ஃபேஸ்புக் கடவுச்சொல்கள் கண்டிப்பாக இருக்கலாம் என்று வல்லுநர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

உலகத்தில் மொத்தம் 8 பில்லியன் மக்கள் ஆனால் 16 பில்லியன் பாஸ்வர்ட் அடங்கிய file ஹேக்கர் உலகில் பகிரப்பட்டிருக்கிறது அதிர்ச்சியளிக்கிறது .

**இப்போது நாம் என்ன செய்யவேண்டும்?**

1. உடனடியாக உங்கள் கடவுச்சொல்லை மாற்றவேண்டும். மிகவும் கடினமானதாக குறைந்த பட்சம் 20 எழுத்துகள் கொண்டதாக இருக்கவேண்டும். Password generator பயன்படுத்தலாம்.

2. MFA எனப்படும் ஒன்றுக்கு மேற்பட்ட முறையில் (Google authenticator, Azure, Duo மற்றும் பல உள்ளன) உள்ளே நுழையும்படி உங்களது செயலியின் பாதுகாப்பை நிறுவுதல்.

3. உங்களது கணக்குகளை (Gmail, Facebook மற்றும் பிற) வேறு யாராவது பயன்படுத்துகிறார்களா என்று கண்காணிக்கவேண்டும்.

4. ஒரு பாஸ்வர்டினை ஒன்றிற்கு மேற்பட்ட தளத்தில் பயன்படுத்தாதீர்கள்.

5. Bitwarden, lastpass போன்ற password manager பயன்படுத்துங்கள். Yubikey போன்ற வன்பொருள் கருவியுடன் (FIDO2) password manager பயன்படுத்துதல் உங்கள் பாதுகாப்பினை மேலும் உறுதிப்படுத்தும்.

ஏனென்றால் உங்கள் digital profile விலைமதிப்பு மிக்கது. கொந்தகர் கைகளில் கிடைத்தால் அவர்கள் என்ன செய்வார்கள் என்று தெரியும் தானே? எனவே உங்கள் பாதுகாப்பு உங்கள் கையில்.

# The October Sky
## உண்மைக்கு அருகில் பறத்தல்




வெகுநாட்களுக்கு பிறகு சினிமா பார்க்க நேரம் கிடைத்தது. NETFLIX செயலியை துளாவிக் கொண்டிருந்தபொழுது இந்த படம் கிடைத்தது. உண்மை சம்பவங்களை அடிப்படையாக எடுக்கப்பட்ட அதுவும், அறிவியல் சார்புடையது என்றவுடன் பார்க்கத் தொடங்கினோம். மிக நல்ல படம். உண்மைக் கதையை அதுவும் ஏற்கெனவே நான்கு புத்தகங்களாக வெளிவந்த தன்வரலாற்று நூலை ஒரு மணி 30 நிமிட திரைப்படமாக எடுப்பது மிகப்பெரிய சவால். அமெரிக்கர்கள் இந்த விஷயத்தில் கில்லாடிகள்.

கோல்வுட் எனும் நிலக்கரி சுரங்கத்தை நம்பி வாழும் சிற்றூரிலிருந்து எவ்வாறு நான்கு இளைஞர்கள் அமெரிக்காவின் சிறந்த பல்கலைக் கழகத்தில் படித்து வாழ்க்கையில் முன்னேறுகின்றனர் என்பது தான் கதை. ஆனால் இந்தக் கதையை எவ்வளவு உண்மைக்கு மிக அணுக்கமாக, எந்தவிதமான சோக கீதம் பாடாமல் ஒரு சுவாரசியமாக படமாக்கியிருக்கிறார்கள் என்பதில் தான் இந்த படத்தின் உத்தி.

இந்த படத்திலும் செண்டிமெண்ட் இருக்கிறது. காதல், காதல் தோல்வி, ராக்கெட் ஏவுவதற்கு பல்வேறு முயற்சிகள் செய்தல், அவற்றின் தோல்விகள் எல்லாம் சிறப்பாக எடுத்திருக்கின்றனர். அறிவியல் இருக்கிறது .அதனை எவ்வாறு தெளிவாக சாதாரண மக்களுக்கு புரியும்படி எடுப்பது என்ற வித்தையும் இயக்குனருக்கு தெரிந்திருக்கிறது.

இந்தப் படத்தை பார்த்த பிறகு ஒரு விஷயம் நன்றாக புரிகிறது , "குழந்தைகளுக்கு அவர்களது விருப்பத்தை தூண்டுவதற்கு தேவையான சூழ்நிலையை ஏற்படுத்துவது மட்டுமே பெற்றோர்களின் வேலை. அதற்குப்பிறகு அவர்கள் அதனை பார்த்துகொள்வார்கள்.'

சிறந்த படம். Netflix-ல் கிடைக்கிறது. பாருங்கள்.

**பின்குறிப்பு :** நம்மவர்கள் சூரரைப் போற்று என்று Simply Fly: A Deccan Odyssey நாவலை கொலை செய்தார்கள். இதில்வேறு அப்துல் கலாம் பற்றி படம் எடுக்கிறார்கள். இப்பொழுதே பகிரென்று இருக்கிறது. பார்க்கலாம் எப்படி இருக்கிறது என்று.

# அடக்கம் லெஜெண்டுகளுள் உய்க்கும்!

90 களில் டென்னிஸ் விளையாட்டுகளை பார்த்தவர்கள் பீட் சாம்ப்ராஸை அவ்வளவு எளிதில் மறக்க மாட்டார்கள். ஆடுகளத்தில் எந்த அலட்டலும் இல்லாமல் விளையாடுவார். எப்பேர்ப்பட்ட இக்கட்டான போட்டி சூழ்நிலையிலும் அவர் முகம் சுருங்கி பார்த்தது கிடையாது. இவருக்கும் இவனிச்செவிச் இடையேயான போட்டி என்றால் கொண்டாட்டம் தான்.

ace எனப்படும் உத்தியில் இருவரும் விற்பன்னர்கள். அதுவும் சாம்ப்ராஸின் இரண்டாம் செர்வ் ACE அதி உன்னதம். அவரை 2001 ஆம் ஆண்டு விம்பிள்டன் போட்டியில் தோற்கடித்த பிறகு Roger Federer உருண்டு கொண்டாடிய நாள் முதல் அவரை ( Federer ) பிடிக்காமல் போனது.



பீட் சாம்ப்ராஸ் - இவனிச்செவிச்

அன்றிலிருந்து 2008 ஆம் ஆண்டு வரை Federer-ஐ யாரவது தோற்கடிப்பார்களா என்று காத்துக்கொண்டிருந்தேன். அப்போது Nadal வந்தார். அன்றிலிருந்து அவர் ஓய்வு பெறும் வரை அவர்தான் என் டென்னிஸ் ஆதர்சம். அவரின் எளிமை, அடக்கம் மற்றும் களத்தில் அவரின் ஆக்ரோஷம் எனக்கு மிகவும் பிடிக்கும்.

எதிராளி வெற்றி பெறும் கடைசிப் புள்ளி வரைக்கும் தன்னால் ஜெயிக்க முடியுமென்று விளையாடுபவர். அவர் ஓய்வு பெற்ற பிறகு, இப்போது Alcarez எனக்கு மிகவும் பிடித்து போய்விட்டது. பாருங்கள் எவ்வளவு எளிமை. French Open ஜெயித்த பிறகு தனது கோப்பையை Ball Boys / Girls உடன் சேர்ந்து கொண்டாடும் காணொளி அற்புதம். அடக்கம் லெஜெண்டுகளுள் உய்க்கும்


CEYLON EXPRESS
MONEY TRANSFER
Best Rates Guarantee
Same Day Bank Transfer
Responsible Customer Support
Easy, Quick Internet Money Transfer
127, Walker st, Dandenong
CONTACT : OSMAN 0402 396 052


PAINTING SERVICES
INTERIOR AND EXTERIOR
TIMBER FLOORING
supply and installation
DECKING
BUDGET FRIENDLY HOME IMPROVEMENTS
Contact : 040 0287 198

# யூத எதிர்ப்புடையோர் ஆஸி. நுழையத் தடை



யூத விரோதத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்காத நிறுவனங்களுக்குரிய அரச நிதி ஒதுக்கீடு நிறுத்தப்பட வேண்டும் எனவும், யூத விரோதக் கருத்துகள் கொண்டவர்கள் ஆஸ்திரேலியா வருவதை தடுக்க வேண்டும் எனவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

யூத எதிர்ப்பு சம்பவங்களைக் கையாள்வதற்காக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட சிறப்புத் தூதுவர் ஜிலியன் செகலால் வெளியிடப்பட்டுள்ள பரிந்துரை அறிக்கையிலேயே இவ்விடயம் முன்வைக்கப்பட்டுள்ளது.

20 பக்கங்கள் கொண்ட மேற்படி அறிக்கையில் பிரதமர் அந்தோனி அல்பானீஸி வெளியிட்டார்.

ஒக்டோபர் 7 தாக்குதல் சம்பவத்துக்கு பிறகு ஆஸ்திரேலியாவில் யூத எதிர்ப்பு சம்பவங்கள் அதிகரித்துள்ளன எனவும், கடந்த வருடத்தைவிட இவ்வருடம் அது மும்மடங்காக அதிகரித்துள்ளது எனவும் சிறப்பு தூதுவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, இப்படியான வெறுக்கத்தக்க செயற்பாடுகளை எதிர்த்து போராடுவதற்கு அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

யூத கலாசார விழாக்களை நடத்துவதற்கு அரசாங்கம் அனுசரணை வழங்க வேண்டும் எனவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மேற்படி பரிந்துரை அறிக்கை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என பிரதமர் அந்தோனி அல்பானீஸி உறுதியளித்துள்ளார்.

# ஆஸி. அரசியல்வாதிக்கு அமெரிக்காவில் அடித்த அதிஷ்டம்!

ஆஸ்திரேலியாவில் லிபரல் கட்சியில் இருந்து இடைநிறுத்தப்பட்ட சிட்னி முன்னாள் கவுன்சிலர் நிக் ஆடம்ஸை, மலேசியாவுக்கான தமது நாட்டு தூதுவராக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நியமித்துள்ளார்.

2009 ஆம் ஆண்டு ஊடகவியலாளர் ஒருவரை திட்டிய விவகாரம் தொடர்பிலேயே அவர் லிபரல் கட்சியில் இருந்து இடை நீக்கம் செய்யப்பட்டிருந்தார்.

இந்த அறிவித்தல் அவருக்கு செல்வதற்கு முன்னதாகவே அவர் தனது பதவியை இராஜினாமா செய்துவிட்டார்.

அதன்பின்னர் அவர் அமெரிக்காவுக்கு இடம்பெயர்ந்தார். அங்கு அறக்கட்டளையொன்றை நடத்தினார். அதேபோல ஊடக செயற்பாடுகளிலும் ஈடுபட்டார்.

40 வயதான ஆடம்ஸ் சிட்னி பல்கலைக் கழகத்தில் தகவல் ஊடகத்துறையில் பட்டம் பெற்றுள்ளார்.



அவரை தூதுவர் பதவிக்கு ட்ரம்ப் நியமித்திருந்தாலும் செனட் ஒப்புதல் அளித்தால் நியமனம் உறுதியாகும்.

பாலஸ்தீனம் மீதான இஸ்ரேலின் போருக்கு அமெரிக்கா ஆதரவளிப்பதால் அந்நாட்டுக்கும், மலேசியாவுக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே ஆடம்ஸை தூதுவராக ட்ரம்ப் களமிறங்குகின்றார்.

# "காளான் கொலையாளி"க்கு ஆயுள் தண்டனை!

நச்சுக் காளானை சமைத்துக்கொடுத்து மூவரை கொலைசெய்தார் எனக் கூறப்படும் பெண் குற்றவாளியென அறிவிக்கப்பட்டுள்ளது. அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

2023 ஜூலை 29 ஆம் திகதி தனது முன்னாள் கணவரின் பெற்றோர் மற்றும் சகோதரி ஆகியோருக்கே இவர், நச்சுக்காளானை சமைத்துக் கொடுத்துள்ளார்.

இதனால் கடுமையாக பாதிக்கப்பட்ட



அவர்கள், வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தனர்.

இதனையடுத்து எரின் பாட்டர்சன்மீது கொலைக்குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு, விசாரணைகள் இடம்பெற்றுவந்தன.

ஜூரி குழு ஏழு நாட்கள் ஆலோசனை செய்த பிறகு, விக்டோரியாவின் மொர்வெல் நகரில் 11 வாரங்கள் நீடித்த வழக்கின் முடிவில், எரின் பாட்டர்சன குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டது.

இத்தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர் பாட்டர்சன் மெல்பேர்ண் சிறைச்சாலைக்கு அழைத்து செல்லப்பட்டார். இதன்போது நீதிமன்ற வளாகத்தில் அவரை நோக்கி கொலைகாரி என கோஷங்கள் எழுப்பட்டன.

மூன்று கொலைக்குற்றச்சாட்டுகள் மற்றும் கொலை முயற்சி தொடர்பில் இவருக்கான தண்டனை விரைவில் வழங்கப்படவுள்ளது. அது பெரும்பாலும் ஆயுள் தண்டனையாக இருக்குமென கருதப்படுகின்றது.

# ஆஸி. வருகிறார் ஜனாதிபதி ட்ரம்ப்!

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அடுத்த வருடம் ஆஸ்திரேலியாவுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

குவாட் தலைவர்களின் உச்சி மாநாடு அடுத்த வருடம் ஆஸ்திரேலியாவில் நடைபெறவுள்ளது.

குயின்ஸ்லாந்தில் மாநாடு நடத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

குவாட் அமைப்பில் அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

குவாட் வெளிவிவகா அமைச்சர்கள் மாநாடு கடந்த வாரம் அமெரிக்காவில் நடைபெற்றது. இதன்போது தலைவர்கள் மாநாட்டை ஆஸ்திரேலியாவில் நடத்துவது மீள உறுதி செய்யப்பட்டது.



# லேபர் அரசின் உறுதிமொழி நாடகமா?

2030 ஆம் ஆண்டுக்குள் 12 லட்சம் புதிய வீடுகளை நிர்மாணிக்கும் இலக்கை லேபர் அரசால் அடைய முடியுமென பொருளாளர் ஜிம் சால்மர்ஸ் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

குறித்தொகுக்கப்பட்ட காலத்துக்குள் மேற்படி இலக்கை அடைய முடியாது என கருவூலத்துறையால், அரசாங்கத்துக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது எனக் கூறும் ஆவணங்களை ஊடகமொன்று வெளியிட்டுள்ளது.

அத்துடன், பாதீட்டை நிலையாக பேண வேண்டுமெனில் வரிகளை அதிகரிக்க வேண்டும் எனவும், செலவீனங்களை கட்டுப்படுத்த வேண்டும் எனவும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது எனவும் அச்செய்தியில் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே பொருளாளர் மேற்கண்டவாறு நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

வீட்டுப் பிரச்சினையானது ஆஸ்திரேலியப் பொருளாதாரம் எதிர்கொள்ளும் சவால்களில் ஒன்று எனவும் பாதீட்டை மேலும் நிலையானதாக மாற்ற வரிகளை அதிகரிக்க நேரிடும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொருளாதார நிபுணர்கள் மற்றும் தொழிற்சால் வல்லுனர்கள், லேபர் கட்சி அதன் இலக்குகளைத் அடைய முடியாத சூழ்நிலை ஏற்படக்கூடும் எச்சரித்திருந்தாலும், டெலாய்ட் அக்சஸ் எகனாமிக்ஸ் ஆராய்ச்சி நிறுவனம், 2029 ஆம் ஆண்டளவில் 10 லட்சம் வீடுகள் என்ற இலக்கை அடைய முடியும் எனக் கணித்துள்ளது.

தனது வாக்குறுதியை நிறைவேற்ற, லேபர் கட்சி வருடாந்தம் சராசரியாக 2லட்சத்து 40 ஆயிரம் புதிய வீடுகள் நிர்மாணிக்க வேண்டும். 2016 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் மட்டுமே அந்த இலக்கை அடையக்கூடியதாக இருந்துள்ளது. 2023 இல் ஒரு லட்சத்து 73 ஆயிரம் வீடுகளே கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

# சிட்னி பல்கலைமீது சைபர் தாக்குதல்

சிட்னி பல்கலைக்கழகத்தில் தொடர்ச்சியாக சைபர் தாக்குதல் மேற்கொண்டுவந்த அப்பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவியொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

2021ஆம் ஆண்டு முதல் இத்தகைய இணைய குற்றங்கள் இடம்பெற்றுவந்துள்ளன என்று தெரியவருகின்றது.

அங்கீகரிக்கப்படாத இணைய சேவை அணுகல், தரவு வெளியேற்றம், பல்கலைக்கழக கட்டமைப்பை தவறாக பயன்படுத்தல், மாணவர்களின் தகவல்கள் விற்பனை போன்ற நடவடிக்கைகள் இதன்மூலம் இடம்பெற்று வந்துள்ளன.

இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வந்த பொலிஸார் 27 வயது யுவதி ஒருவரை கைது செய்தனர். அவரிடமிருந்து கணினி மற்றும் தொலைபேசி என்பன



மீட்கப்பட்டுள்ளன. விசாரணைகளின் பின்னர் அவர்மீது 20 குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இவர் சைபர் தாக்குதல் மூலம் தனது பெறுபேறுகளைக்கூட மாற்றியுள்ளார் என தெரியவருகின்றது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர்.

# மாத ராசிபலன்



## மேடம்

மேஷ ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் நேர்மறையான சிந்தனைகள் இருக்கும். எந்த ஒரு குழப்பமான விஷயத்திற்கும் நிதானமாக சிந்தித்து ஒரு தீர்வை கொடுப்பீர்கள். உங்களுடைய வாழ்க்கையில் மென்மேலும் உயர்வு ஏற்பட என்ன முயற்சிகள் தேவையோ, அதையெல்லாம் மேற்கொள்வீர்கள். உங்களுடைய மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் உயரும். புது வேலை தேடிக் கொண்டிருப்பவர்களுக்கு நல்ல வாய்ப்புகள் வரும். மாணவர்கள் கல்வியில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். சிவன் கோவிலுக்கு சென்று வழிபாடு செய்யுங்கள்.

## இடபம்

ரிஷப ராசிக்காரர்கள் இந்த மாதம் பொறுமையாக இருக்க வேண்டும். வேலை வியாபாரம் குடும்ப விஷயம் எதிலும் அவசரப்படக்கூடாது. நிதானமாக சிந்தித்து செயல்பட்டால், வரக்கூடிய பிரச்சனையிலிருந்து 75% தப்பித்துக் கொள்ளலாம். 25% நீங்கள் சாதுரியமாக செயல்பட வேண்டும். கூடுமான வரை இந்த மாதம் பெரிய முதலீடு எதுவும் செய்யாமல் இருப்பதும் நல்லது. தெரியாத விஷயங்களில் தலையிட வேண்டாம். முன்பின் தெரியாத நபரை முழுமையாக நம்ப வேண்டாம்.

## மிதுனம்

மிதுன ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் பொருளாதார நிலை உயரும். நீண்ட நாள் எதிர்பார்த்த சம்பள உயர்வு, பதவி உயர்வு கிடைக்க வாய்ப்பு உள்ளது. நிம்மதியாக சாப்பிட, நிம்மதியாக தூங்க நேரம் ஒதுக்க முடியாது. இதற்கெல்லாம் ஒரே தீர்வு நேரத்தை சரியாக பயன்படுத்த வேண்டும். சோர்ந்து போய் உட்கார கூடாது. ஒரு வேலையை நாளைக்கு செய்யலாம் என்று தள்ளிப் போடக்கூடாது. மாணவர்கள் தகாத நட்புறவு வைத்துக் கொள்ள வேண்டாம். பெற்றோர்கள் பிள்ளைகளுடைய முன்னேற்றத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

## கடகம்

கடக ராசி காரர்களுக்கு இம்மாதம் சிறப்பாக அமையவுள்ளது. எல்லா நல்ல காரியங்களும் கை கூடி வரும். தேவையற்ற எதிர்ப்புகள், எதிரிகள் பிரச்சனைகள் எல்லாம் உங்களை விட்டு விலகும். இயலாமையெல்லாம் உங்களை விட்டு விலகப் போகிறது. இனி வரக்கூடிய நாட்களில் நீங்கள் பம்பரம் போல சுழன்று வேலை செய்து, நல்ல பெயர் வாங்க போகிறீர்கள். ஆரோக்கியத்தில் மட்டும் கூடுதல் கவனம் செலுத்துங்கள். மனதை போட்டு குழப்பிக் கொள்ள வேண்டாம். தினமும் முருகரை கும்பிடுங்கள் நல்லது நடக்கும்.

## சிம்மம்

சிம்ம ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் மகிழ்ச்சி நிறைந்த மாதமாக தான் இருக்கும். குடும்பத்தில் இருந்து வந்த கசப்பான சம்பவங்கள் மறைந்து விடும். இனி வரும் நாட்களில் வீட்டில் சுப செய்திகள், கெட்டி மேள சத்தம் கேட்கவும் வாய்ப்புகள் இருக்கிறது. உங்களுடைய வேலைகளை அடுத்தவர்களை நம்பி ஒப்படைக்க வேண்டாம். வியாபாரத்தில் யாரையும் நம்ப வேண்டாம். எதுவாக இருந்தாலும் உங்களுடைய கட்டுப்பாட்டில் இருக்கட்டும். பிள்ளைகளுடைய எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனை மேலோங்கும்.

சேமிப்பு அதிகரிக்கும்.

## கன்னி

கன்னி ராசிக்காரர்கள் இந்த மாதம் நீங்கள் உண்டு, உங்கள் வேலை உண்டு என்று இருக்க வேண்டும். மூன்றாவது நபருடைய வாழ்க்கையில் தலையிடக்கூடாது. அனாவசியமாக பேசுவதை தவிர்த்துக் கொள்ளுங்கள். மற்றபடி குடும்பத்தில், சந்தோஷம் இரட்டிப்பாகும். குழந்தை பாக்கியம் வேண்டி காத்துக் கொண்டிருப்பவர்களுக்கு நல்ல செய்தி உண்டு. நிதி நிலைமை சீராகும். பிள்ளைகளுடைய எதிர்காலத்திற்கு தேவையான நல்லது நடக்கும். இந்த மாதம் கூடுமானவரை ஹனுமன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள் நல்லது நடக்கும்.

## துலாம்

துலாம் ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் பிரச்சினையிலிருந்து விடுபடக் கூடிய மாதமாக இருக்கும். உங்களுடைய கடமைகளில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள். யார் தவறு செய்தாலும் முகத்திற்கு நேரே சொல்லி விடுவீர்கள். இதனால் புது எதிரிகள் உருவாக வாய்ப்பு உள்ளது. இருந்தாலும் உங்களுக்கு இருக்கக்கூடிய கெட்ட பெயர் விலகும். உங்கள் மீது விழுந்த பழி விலகும். வேலையிலும் வியாபாரத்திலும் நல்ல முன்னேற்றம் காணப்படும். உறவுகளுக்குள் சின்ன சின்ன மன கசப்பு வர வாய்ப்பு உள்ளது.

## விருச்சிகம்

விருச்சிக ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் நல்ல முன்னேற்றம் தரும் மாதமாக இருக்கும். எந்த இடத்தில் எல்லாம் தலை குனிந்து நின்றீர்களோ, அந்த இடத்தில் எல்லாம் உங்களுக்கு மதிப்பும் மரியாதையும் உயரும். யாரெல்லாம் உங்களை அவமானப் படுத்தினார்களோ, அவர்கள் வாயால் பாராட்டு பத்திரம் வாசிப்பார்கள். உங்களுடைய அயராத உழைப்பும் கூடுதல் முயற்சியும், வெற்றிகளை வாரி வாரி கொடுக்கும். இத்தனை நாள் பட்ட கஷ்டத்திற்கு நல்லதொரு பலனை இந்த மாதம் காண்பீர்கள்.

## தனுசு

தனுசு ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் பொருளாதார ரீதியாக நல்ல முன்னேற்றம் இருக்கும். சேமிப்பு அதிகரிக்கும். வீட்டில் பெண் பிள்ளைகளுக்கு நகை வாங்குவதற்கும், இந்த மாதம் நல்ல வாய்ப்புகள் கைகூடிவரும். புதிய முயற்சிகள் நல்லபடியான வரவேற்பை கொடுக்கும். உங்களுடைய உழைப்பு என்றுமே வீண் போகாது. சோர்வடையாமல் உங்களுடைய வேலைகளை பார்க்க கடவுள் உங்களுக்கு இந்த மாதம் நல்ல வழியை காட்டிக் கொடுப்பான். ஆரோக்கியத்தில் இருந்து வந்த பிரச்சனைகள் விலகும்.

## மகரம்

மகர ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் அமோகமான அற்புதமான வாரமாக இருக்கும். எல்லா நல்லதையும் இறைவன் உங்களுக்கு கொடுக்க போகின்றான். பெயர் புகழ் அந்தஸ்து பணம் எல்லாம் தேடி வரும். ஆனால் அதை நீங்கள் எப்படி கையாளுகிறீர்கள் என்பதில் தான் இந்த மாதம் சவால் இருக்கிறது. வருமானத்தை சேமிக்க வேண்டும். பெயர் புகழ் அந்தஸ்து வரும்போது, தலைகனத்தோடு நடந்து கொள்ளக் கூடாது. அடுத்தவர்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும். இந்த மாதம் தன்னடக்கம் அவசியம் தேவை.

## கும்பம்

கும்ப ராசிக்காரர்கள் இந்த மாதம் வெற்றிவாகை சூடுவீர்கள். நீண்ட நாள் முயற்சிகள் நல்ல பலனை கொடுக்கும். நிதிநிலைமை சீராகும். கணவன் மனைவி ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளுடைய வாழ்க்கையில் நல்ல முன்னேற்றம் காணப்படும். குடும்பத்தில் சுப காரிய நிகழ்ச்சிகள் நடக்கும். வியாபாரத்தை பொருத்தவரை நல்ல லாபம் கை நிறைய கிடைக்கும். நல்லதை அடக்கத்தோடு ஏற்றுக் கொள்ளுங்கள். இயலாதவர்களுக்கு உதவி செய்யுங்கள். நிச்சயம் மேலும் நல்லது நடக்கும்.

## மீனம்

மீன ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் முழுவதும் நிறைய நல்ல அனுபவங்கள் கிடைக்கப் போகிறது. நீங்கள் செய்த தவறை உணர்ந்து திருத்திக் கொள்வீர்கள். வாழ்க்கையில் முன்னேற முயற்சிகளை மேற்கொள்வீர்கள். தேவையற்ற பிரச்சனைகளில் இருந்து விடுபடுவீர்கள். சோம்பேறித்தனம் விட்டு அகலும். வியாபாரத்தில் இருந்து வந்த தடைகள் விலகும். உழைப்பு உழைப்பு என்று இந்த மாதம் ஓடிக்கொண்டே இருக்க வேண்டிய சூழ்நிலை வந்தாலும், அதை எல்லாம் சமாளித்து குடும்பத்தை சரி கட்டி வாழ்க்கையை சரியான பாதையில் எடுத்துச் செல்ல, கடவுள் உங்களுக்கு துணையாக இருப்பான்.


ATOP IMPORTS
FLOORING
We Supply & Install all
Types of Flooring Products
Gloss Tiles
Matte Tiles
Carpets
Decking
Cladding
Vinyl
Hybrid Flooring
Solid Parquetry
Engineered Oak
Engineered Parquetry
0433071956
www.atopimports.au
U1/44 Princes Hwy, Eumemmerring VIC 3177


ATHAVAN
ஆதவன் ආතාවන්
PRODUCTS
PRESERVATIVES NO ADDED
MONOSODIUM GLUTAMATE MSG NO ADDED
PREMIUM PRODUCTS FROM
Jaffna
மிளகாய்த்தூள்
මිරිස් කුඩු
CHILLI POWDER
தானிய சத்துமாக்கலவை
CEREAL NUTRIENT MIXTURE
Exclusive Offer 100g + FREE 25g = 125g
மஞ்சள் தூள்
TURMERIC POWDER
வல்லாரை பிட்டுமா
வறுத்த கறித்தூள்
ROASTED CURRY POWDER
யாழ்ப்பாணத்து கறித்தூள்
JAFFNA CURRY POWDER
Roasted
Jaffna
CURRY POWDER
900g
prepared using
Traditional methods.
Distributed in Australia,
Sri Lanka, and other countries.
SRI AYYAPPA (PVT) LTD.
40 David St, Dandenong VIC3175
Australia.
+61 449 722 392 | +61 3 7049 9441
sriayyappa.ptyltd@gmail.com
SRI AYYAPPA GROUP (PVT) LTD.
Kaithady Weast, Kaithady, Jaffna,
Sri Lanka.
+94 74 158 3717
sriayyappa.lk@gmail.com
www.sriayyappa.com.lk